உ

# சைவநெறி

## வினா விடை

### 10ஆம் ஆண்டு

[ஒன்பதாம் வகுப்பு]

1985 ஆம் ஆண்டு, கல்வியமைச்சினல் வெளியிடப்பட்ட பத்தாம் ஆண்டுக்கான (9ஆம் வகுப்பு) 'சைவ நெறி' (திருத்திய பதிப்பு) நூலுக்கு அமைவாக எழுதப்பட்ட சிறந்த வினாவிடை நூல். இறுதியில் மாதிரி வினாத்தாளும் கொண்டது.

ஆக்கம்:
வாணி சொக்கலிங்கம் B. A.

பதிப்பாளர்:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

உ

# சைவநெறி
# வினா விடை

## 10ஆம் ஆண்டு

[ஒன்பதாம் வகுப்பு]

1985 ஆம் ஆண்டு, கல்வியமைச்சினால் வெளியிடப்பட்ட பத்தாம் ஆண்டுக்கான (9ஆம் வகுப்பு) 'சைவ நெறி' (திருத்திய பதிப்பு) நூலுக்கு அமைவாக எழுதப்பட்ட சிறந்த வினாவிடை நூல். இறுதியில் மாதிரி வினாத்தாளும் கொண்டது.

ஆக்கம்:
வாணி சொக்கலிங்கம் B. A.

பதிப்பாளர்:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை]

[விலை ரூபா 10-00

முதற் பதிப்பு: 1987

அச்சுப்பதிப்பு:
ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்
63, B. A. தம்பி வீதி,
யாழ்ப்பாணம்.

பதிப்பாளர்:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# சைவநெறி வினாவிடை

## 10ஆம் ஆண்டு

## வினாக்கள்

### பகுதி I

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையினை அதன்கீழ்த் தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலுமிருந்து தெரிந்து அடிக்கோடிட்டுக் காட்டுக:

1. தில்லையம்பலத் திருக்கூத்து உணர்த்தும் தத்துவம்,
   1) நடராசரே பரம்பொருள் என்பது
   2) ஆட்டுவிப்பவர் நடராசர், ஆடுவன ஆன்மாக்கள் என்பது
   3) படைத்தல் முதலாகிய ஐந்தொழில்களையும் நடராசர் நடத்துவதனாலேயே உலகம் இயங்குகின்றது என்பது.
   4) நடராசர் நடனக்கலைக்கு முதலவர் என்பது.

2. நாம் கடவுளை வழிபடுகையில் முதலில் அம்மையையும் பின்னர் அப்பனையும் வணங்குவதன் காரணம்,
   1) அம்மையே அப்பனிலும் அன்பானவள் என்பதே,
   2) உலகவாழ்க்கையில் எம்மை ஈடுபடுத்தி அவ்வழியில் ஞானத்தை வழங்கி அப்பனிடம் அழைத்துச் செல்பவள் அம்மை என்பதே.
   3) உலகில் ஒருவருக்கு மிக உயர்ந்தவள் அவர் தாய் என்பதே.
   4) ஆன்மாக்களுக்கு வேண்டிய யாவும் வழங்குபவள் அம்மை என்பதே.

3. சிந்து வெளிர் நாகரிகம் நிலவிய காலம்,
   1) கி. மு. 1500  2) கி மு. 2000  3) கி. மு. 3000  4) கி. மு. 5000

4. சிந்து வெளிநாகரிகத்தைத் தோற்றுவித்தோர் என்று ஆராய்ச்சியாளர் பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டவர்
   1) திராவிடர்  2) ஆரியர்  3) இந்து ஐரோப்பியர்  4) தமிழர்

5. மும்முக (திரிமுக) மூர்த்தியை 'முந்துசிவன்' என்று துணிந்து கூறியவர்,
   1) சேர். அலெக்சாந்தர் கன்னிங்காம்  2) ஹீரஸ் பாதிரியார்
   3) சேர். ஜோன் மார்ஷல்  4) சேர். மோட்டிமர் வீலர்

6. ஆரப்பா நகரிலே அகழ்ந்தெடுக்கப்பட்ட கூம்பு வடிவான கற்கள்,
   1) நிறைக்குப் பயன்படுத்தியவை எனக் கொள்ளப்படும்.
   2) சிவலிங்கங்கள் எனக் கொள்ளப்படும்.
   3) விநாயகர் வடிவங்கள் எனக் கொள்ளப்படும்.
   4) கட்டடம் கட்ட உபயோகிக்கப்பட்டவை எனக் கொள்ளப்படும்.

7. இந்தோ ஆரியர் என்று வரலாற்று நூலாரால் குறிக்கப்படுவோர்.
   1) மத்திய ஐரோப்பாவிலிருந்து கிழக்குநோக்கி ஈரான்வழியாக இந்தியாவுக்குள் வந்தவர்கள்
   2) இந்து நதியூடாகத் தென்னிந்தியாவிற்குள் வந்தவர்கள்.

3) மத்திய ஐரோப்பாவிலிருந்து மேற்கு நோக்கிச் சென்றவர்கள்
4) இந்தியாவின் ஆதிக்குடிகள்

8. 'ருதிர' என்று ஆரியர் சிவனுக்குரிய பெயரை மொழிபெயர்த்த காரணம்,
1) சிவன் கரிய நிறம் உடையவன் என்பதே 2) சிவன் செந்நிறத்தோன் என்பதே
3) சிவன் வெண்ணிறத்தோன் என்பதே 4) சிவன் புயற்கடவுள் என்பதே

9. 'தஸ்யுக்கள்' என்ற பெயரின் பொருள்,
1) பெரியார்கள் 2) இழிந்தவர்கள் 3) அடிமைகள் 4) ஆரியர் அல்லாதவர்

10. 'பூஜா' என்ற ஆரியச் சொல்லின் மூலம்,
1) பூமியில் பிறப்பது என்ற பொருளுடைய தமிழ்ச்சொல்
2) பூசுவது என்னும் பொருளுடைய தமிழ்ச்சொல்
3) பூமியில் செய்யப்படுவது என்ற கருத்துடைய தமிழ்ச்சொல்
4) பூக்கள் கொண்டு செய்யப்படும் இறைவழிபாடு என்ற கருத்துடைய தமிழ்ச்சொல்.

11. வேதங்களை நான்கு தொகுதிகளாக வகுத்தவர்,
1) கடவுள் 2) பராசரர் 3) வியாசர் 4) கௌதமர்

12. வேதத்தின் மந்திரங்கள் தொகுக்கப்பட்ட பகுதி
1) பிராமணம் 2) சங்கிதை 3) ஆரணியகம் 4) உபநிடதம்

13. இருக்குவேத பாசுரங்களது எண்ணிக்கையால் முதலிடம் பெறுபவன்,
1) அக்கினி 2) சூரியன் 3) சோமன் 4) இந்திரன்

14. நாகவழிபாடு இடம்பெறும் வேதம்,
1) இருக்குவேதம் 2) யசுர்வேதம் 3) சாமவேதம் 4) அதர்வவேதம்.

15. அதர்வ வேதத்திற் காணப்படும் சமயம்,
1) ஆரியருக்கே உரியது
2) திராவிடருக்கே உரியது
3) ஆரியரல்லாதாருக்கு உரியது
4) ஆரியரதும், ஆரியரல்லாதாரதும் கொள்கைகள் கலந்து உருவானது.

16. சாந்தோக்கிய உபநிடதத்தில் வரும் மகாவாக்கியம்,
1) ஏகம் சத் 2) தத்துவம் அஸி 3) அஹம் பிரமாஸ்மி 4) தத் சத்

17. ஆசிரியருடன் வாழ்ந்து கல்வி கற்பது,
1) பள்ளி வாசம் 2) விடுதி வாசம்
3) குருகுல வாசம் 4) இல்ல வாசம்

18. சைவச் சார்புடைய உபநிடதம்
1) சாந்தோக்கிய உபநிடதம் 2) மாண்டூக்கிய உபநிடதம்
3) ஈச உபநிடதம் 4) சுவேதாஸ்வதர உபநிடதம்

19. தொல்காப்பியர் 'மாயோன்' எனக்குறிக்கும் முல்லைநிலத் தெய்வம்,
1) முருகன் 2) சிவன் 3) கண்ணன் 4) இந்திரன்

20. சங்ககாலத்தில் பலிபீடத்திற்கு வழங்கிய சொல்

1) கந்தழி  2) மாத்தாள்  3) வள்ளி  4) இட்டிகை

21. சங்ககாலத்திலே பின்வரும் தெய்வங்களுக்குக் கோயில்கள் இருந்தன,

1) சிவன், திருமால், இந்திரன்  2) முருகன், திருமால், வருணன்

3) முருகன், திருமால், காடுகிழாள்  4) முருகன், சிவன், விநாயகர்

22. 'தோடுடைய செவியன்' என்ற தேவாரச் சொற்றொடரின் நுட்பம்,

1) அம்மையையும் அப்பனையும் ஒருசேரப் பாடியமை

2) ஓங்கார எழுத்தைத் தகரமெய்யோடு புணர்த்தியமை

3) சிவபெருமான் பெண்கள் போலத் தோடு அணிந்தருள்பவர் என்ற உண்மை

4) சிவபெருமானின் திருச்செவியில் கேட்பதற்காகத் திருச்செவியைச் சிறப்பித்தமையும் ஓங்கார எழுத்தைத் தகரமெய்யோடு புணர்த்தியமையும்

23. திருவரத்துறையிலே திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான்,

1) பொற்றாளம் அருளினர்  2) பொற்காசு அருளினர்

3) முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னங்கள் அருளினர்

4) உலவாக்கிழி அருளினர்

24. திருமருகலிலே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் நிகழ்த்தியருளிய அற்புதம்,

1) பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியமை  2) திருக்கதவம் அடைக்கப் பாடியமை

3) ஆண்பனைகளைப் பெண்பனைகள் ஆக்கியமை

4) பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்தமை

25. திருநாவுக்கரசு நாயனரின் சூலைநோய் நீக்கிய திருத்தலம்,

1) திருவதிகை வீரட்டானம்  2) திருவாரூர்  3) திருப்பாதிரிப் புலியூர்  4) சிதம்பரம்

26. திருநாவுக்கரசுநாயனரைக் கல்லிலே கட்டிக் கடலில் விட்டபொழுது பாடிய பதிகத்தின் தொடக்கம்

1) மாசில் வீணையும் மாலை மதியமும்

2) நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்

3) சொற்றுணை வேதியன் சோதி வானவன்

4) சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்திங்கட் சூளாமணியும்

27. திருநாவுக்கரசர் சிவனடி சேர்ந்த தினம்,

1) வைகாசி மூலம்  2) சித்திரைச் சதயம்,  3) ஆடிச்சுவாதி  4) ஆவிமகம்

28. சுந்தரர் கைலாயத்தில் சிவபெருமானின் அணுக்கத்தொண்டராய் இருந்த காலத்தில் பெற்ற திருநாமம்,

1) ஆலாலசுந்தரர்  2) நாவலூரர்  3) தம்பிரான்தோழர்  4) நம்பியாரூரர்.

29. சுந்தரருக்கு வன்றொண்டர் என்ற திருநாமம் அமையக் காரணம்,

1) அவர் மிகுந்த வலிமை பொருந்திய அடியார்

2) அவர் வல்வினை புரிந்த அடியார்

3) அவர் சிவபெருமானேடு வாதாடி வழக்குரைத்தவர்

4) சிவபெருமானைத் தவிர வேறு தெய்வங்களை இழித்துரைப்பவர்.

30. திருத்தொண்டத்தொகை கூறுவன,

1) சிவபெருமானின் பெருமைகள் 2) சிவசின்னங்களின் மகிமைகள்

3) சிவனடியார்களின் சிறப்புக்கள் 4) சிவலிங்கத்தின் பெருமைகள்

31. மாணிக்கவாசகரை வாதவூரர் என அழைத்த காரணம்

1) அவர் பிறசமயத்தவரோடு வாதம் செய்யும் ஊரவர்

2) அவர் அவதாரம் செய்த ஊர் வாதவூர்

3) அவரின் பெற்றோர் இட்ட திருநாமம் அது

4) பாண்டிய மன்னன் அவருக்களித்த பட்டம்

32. மணிவாசகர் குருவுபதேசம் பெற்ற இடம்

1) சிதம்பரம் 2) திருவண்ணாமலை 3) திருப்பெருந்துறை 4) மதுரை

33. அருட்குரவர் "குதிரைகள் வரும்" என மணிவாசகர் மூலம் பாண்டிய மன்னனுக்கு அறிவித்த தினம்,

1) ஆவணிமூலம் 2) ஆனிமகம் 3) மார்கழித் திருவாதிரை 4) வைகாசிமூலம்

34. நரியைக் குதிரையாக்கிய சம்பவத்தைக் குறிக்கும் திருப்பாடலுக்கு முன்னுள்ள அடி,

1) பெற்றி பிறர்க்கறியாப் பெம்மான் பெருந்துறையான்

2) அரியொடு பிரமற் களவறி யொண்ணான்

3) மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு

4) மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளி

35. திருப்பெருந்துறையிலே மணிவாசகர் தங்கியிருந்த காலத்திலே பெற்ற பக்குவநிலை

1) சீவன் முத்திநிலை 2) ஆன்ம அநுபவநிலை

3) சிவமும் தாமும் ஒன்றென்னும் அத்துவித நிலை 4) சிவாநுபோக முதிர்ச்சிநிலை

36. தில்லைப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மணிவாசகர் பாடியருளிய பிரபந்தம்

1) திருவெம்பாவை 2) பிடித்த பத்து 3. கோயில் மூத்த திருப்பதிகம் 4) திருக்கோவையார்

37. மாணிக்கவாசகர் காலத்தில் வாழ்ந்த சோழ மன்னன்,

1) முதலாம் இராசராசசோழன் 2) இராசேந்திரசோழன்

3) வீரராசேந்திரசோழன் 4) குலோத்துங்கசோழன்

38. பிரணவத்தின் விரிவாக உள்ள தமிழ் நூல்கள்,

1) மெய்கண்ட சாத்திரங்கள் 2) திருமுறைகள்

3) புராண இதிகாசங்கள் 4) வேத ஆகமங்கள்

39. திருமுறைகளில் 'அடங்கல் முறை' எனப்படுவன,

1) முதல பத்துத் திருமுறைகள் 2) முதல் ஒன்பது திருமுறைகள்

3) முதல் ஏழு திருமுறைகள் 4) முதல் மூன்று திருமுறைகள்

40. பதினோராந் திருமுறைத் தொகுப்பில் பாடியருளிய வகையால் இடம்பெறும் நாயன்மார் இருவர்,

1) அதிராவடிகள், பட்டினத்து அடிகள் 2) நக்கீரதேவர், கல்லாடதேவர்

3) ஐயடிகள் காடவர்கோன், கபிலதேவர் 4) காரைக்காலம்மையார், சேரமான்பெருமாள்.

41. சமயகுரவர்களுக்கும் காலத்தால் மூற்பட்டவரும் திருமுறைகளில் பாடி இடம்பெற்றவருமான ஒருவர்,

1) சேரமான் பெருமாள் நாயனார் 2) காரைக்காலம்மையார்
3) ஐயடிகள் காடவர்கோன் 4) நம்பியாண்டார் நம்பி

42. "சுடர் மூன்று" எனத் திருஞானசம்பந்தரால் குறிக்கப்படுவன,

1) ஆகவனீயம், தட்சிணாக்கினி, காருகபத்தியம்
2) சூரியன், சந்திரன், நட்சத்திரம் 3) சூரியன், சந்திரன், அக்கினி
4) சிவம், திருவருட்சத்தி, திரோதானசத்தி

43. அட்டமூர்த்திகளாவார்,

1) சிவம், சத்தி, நாதம், விந்து, பிரமா, விட்டுணு, உருத்திரன், சதாசிவம்.
2) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா.
3) சிவம், சத்தி, சுத்தமாயை, விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திரர், திருமால்.
4) பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சிவம், சத்தி, நாதம், விந்து.

44. திருஞானசம்பந்தர் தமது நெஞ்சைநோக்கி 'என்ன புண்ணியம் செய்தனை' என வியப்பதன் காரணம்,

1) அரிய மானிடப் பிறவியை அது எடுத்தமை,
2) சைவசமயத்தில் பிறக்கும் வாய்ப்பினை அது பெற்றமை,
3) பரசமய கோளரியாக உள்ள தம்மைத் தலைவராய் அது பெற்றமை,
4) திருவலஞ்சுழியில் எழுந்தருளியுள்ள பெருமானை அன்பு செய்யவும் வாயாரப் பாடவும் அதற்கு வாய்ப்புக் கிடைத்தமை.

45. 'தரளங்கள்' என்ற சொல்லின் பொருள்,

1) பவளங்கள் 2) நவரத்தினங்கள்
3) பொன்னும் மணியும் 4) முத்துக்கள்

46. திருக்கோணமலையிலே அடியார்கள் பெருமானைப் போற்றி இசைக்கும் வகை,

1) 'அடியவர்க்கு எளியவர்' என்று
2) 'தாமாகவே வந்து அருளும் தலைவர்' என்று
3) 'தாயினும் நல்ல தலைவர்' என்று
4) 'அடியவர் நெஞ்சங்களில் உறைபவர்' என்று

47. 'நுலைழதரும் நூலினர்' என்ற சொற்றொடர் குறிப்பாக உணர்த்தும் பொருள்,

1) பூணூல் அணிந்தவர் 2) மிகுந்த வீரம் உடையவர்
3) அணுவிலும் அணுவாய் அமர்ந்தவர்
4) உயிருள் உயிராய் நின்று இயக்கும் ஒழுக்கம் உடையவர்.

48. 'மாதர்ப்பிறைக் கண்ணியானை' எனத்தொடங்கும் தேவாரத்தினை அப்பர் சுவாமிகள் பாடிய சந்தர்ப்பம்,

1) திருக்கைலாயத்துக்குச் செல்லும் வழியிலே மேலும் நகரமுடியாது வருந்திய வேளையிலே பாடினார்.
2) திருக்கைலாய யாத்திரையின் போது உடல் தேய்ந்து கிடக்கையில் அந்தணராய் வந்த சிவபெருமான் 'நீர் திருக்கைலாயம் செல்வது முடியாத காரியம்' என்ற சந்தர்ப்பத்தில் பாடினார்.

3) திருக்கைலாயத்தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ள கோலத்தைக் கண்டபோது மனங் கசிந்து பாடினார்.

4) சிவபெருமான் வாக்களித்தபடி திருக்கைலாயக் காட்சியினைத் திருவையாற்றிலே காட்டியருளிய வேளையில் பாடினார்.

49. 'பிறைக்கண்ணி' என்ற சொற்றொடரின் பொருள்,

1) பிறைச்சந்திரனாகிய கண்ணை உடைய உமாதேவி

2) பிறை போன்ற கண்ணை உடைய உமாதேவி

3) பிறையும் கண்ணியும்

4) பிறைச்சந்திரனாகிய தலைமாலை.

50. மாறுபட்ட மனத்தைத் திருத்திக் கொள்ளத் திருநாவுக்கரசர் கூறும் வழி,

1) திருமருகற் பதியில் திருத்தொண்டு செய்தல்

2) திருமருகற் பதிக்கு யாத்திரை செல்லல்

3) திருமருகலிலேயே நிலையாக வாழல்

4) திருமருகற்பெருமானை வாயினால் துதித்து உடம்பினால் வணங்கல்.

51. 'மலையான் மருகனாய் ஆனாய் நீயே' என்ற அடிமூலம் நீர் விளங்கிக் கொள்வது.

1) 'சிவபெருமான் திருக்கைலாயத்தில் மருவியிருப்பவர்' என்பது

2) 'சிவபெருமான் மலையரசன் மகளாகிய பர்வதவர்த்தனியை (உமையை) மணந்தருளியமையால் அவன் மருகன் ஆயினார்' என்பது

3) 'சிவபெருமான் மலையையும் ஆலமரத்தையும் மருவி எழுந்தருளும் இடமாகக் கொள்வார்' என்பது.

4) 'சிவபெருமான் மகாமேருமலையை வில்லாக வளைத்தார்' என்பது.

52. திருப்புன்கூரில் எழுந்தருளிய பித்தனாகிய சிவபெருமானின் சீலம் எனச் சுந்தரரால் குறிக்கப்படுவது

1) திருமால் முதலிய தேவர்களுக்கு அருள் புரியக் கருதி ஆலகால விடத்தினை அருந்தியது

2) மார்க்கண்டேயருக்காகக் காலனைக் காலால் கடிந்தது.

3) தேவர்களுக்காக முருகப்பெருமானைத் தோற்றுவித்து சூரபன்மன் ஆதியரை அழிப்பித்தது

4) திருமாலுக்குச் சக்கராயுதப்படையினை அருளியது.

53. பாற்கடலைக் கடைய மத்தாக நாட்டியது,

| | |
|---|---|
| 1) மகாமேருமலை | 2) இமயமலை |
| 3) கைலாயமலை | 4) மந்தரமலை. |

54. மாணிக்கவாசகர் தமது திருவெம்பாவையில் எம்பிராட்டியின் கரிய நிறத்துக்கு உவமையாகக் கூறுவது.

1) கடல் 2) மேகம் 3) ஆகாயம் 4) கருமணி

55. 'ஏலோரெம்பாவாய்' என்ற சொற்றொடர் குறிக்கின்றபொருள்,

1) ஏலமாகிய வாசனைத்திரவியம் அணிந்த பாவையே!

2) எம்பாவையே! ஏற்பாய்.

3) எம் தோழியே! ஏற்பாயோ?

4) ஏற்றுக்கொள், ஆராய்ந்து பார், பாவைபோன்ற அழகிய எமது தோழியே!

56. பெண்சுமந்த பாகத்தன் என்பது குறிக்கும் இறைவனின் மூர்த்தம்,
   1) கல்யாண சுந்தரேசர் மூர்த்தம்   2) உமாமகேசுவரர் மூர்த்தம்
   3) அர்த்தநாரீச்சுரர் மூர்த்தம்   4) நடராசர் மூர்த்தம்

57. 'அக்கோவால் மொத்துண்டு' என்பதில் 'அக்கோ' என்பவன்,
   1) அந்த அரசனாகிய அரிமர்த்தன பாண்டியன்
   2) அந்த அரசனாகிய இராசராசன்
   3) அந்தத் தெய்வமாகிய பிரமா
   4) அந்தத் தெய்வமாகிய திருமால்

58. 'தோலும் துகிலும்' எனத் தொடங்கும் 'திருக்கோத்தும்பி'ப் பாடலில் குறிக்கப்படுபவர்கள்,
   1) சிவனும் முருகனும்   2) சிவனும் விநாயகனும்
   3) சிவனும் உமாதேவியும்   4) சிவனும் திருமாலும்

59. திருக்கோத்தும்பி என்ற சொற்றொடர் தரும் பொருள்,
   1) தெய்வத் தன்மை பொருந்திய அரச அன்னம்
   2) தெய்வத் தன்மை பொருந்திய அரச சர்ப்பம்
   3) தெய்வத்தன்மை பொருந்திய அரச இடபம்
   4) தெய்வத்தன்மை பொருந்திய அரச வண்டு

60. திருவிசைப்பாவிலே கங்கை கொண்ட சோளேச்சரப்பெருமான் செய்தருளிய திருவிளையாடலாகக் கூறப்படுவது,
   1) ஆலகால விடத்தை அருந்தித் தேவர்க்கு அமிர்தம் அருளியமை
   2) முப்புரங்களை எரித்துத் தேவரைக் காத்தருளியமை
   3) பிரம விட்டுணுக்கள் அடி முடி காண முடியாதவாறு அரும்பெருஞ் சோதியாக எழுந்தமை
   4) முனிவர் நால்வருக்கு ஆகமங்களை உபதேசித்தருளியமை

61. பருதி வானவன் என்ற சொற்றொடர் குறிக்கும் பொருள்,
   1) சூரியனாகிய தேவன்   2) திருமாலாகிய தேவன்
   3) இந்திரனாகிய தேவன்   4) பிரமாவாகிய தேவன்

62. திருவிசைப்பாவிலே ('சுருதிவானவனும்') சிவபெருமானின் சிறப்பாகக் கூறப்படுவது,
   1) எல்லாத் தேவர்களுக்கும் அவர் மேலானவர் என்பது
   2) நினைப்பவர் நினைக்கும் தெய்வவடிவங் கொண்டு அருள் புரிபவர் என்பது
   3) சிவபெருமான் எங்கும் வியாபித்துள்ளார் என்பது
   4) எல்லா ஆன்மாக்களினுள்ளும் உறைபவர் சிவபெருமானே என்பது

63. திருப்பல்லாண்டு இடம்பெறும் திருமுறை,
   1) எட்டாம் திருமுறை   2) ஒன்பதாம் திருமுறை
   3) பத்தாம் திருமுறை   4) ஏழாந் திருமுறை

64. திருப்பல்லாண்டு பாடியருளியவர்,
   1) சேந்தனார்   2) திருவாலியமுதனார்
   3) பூந்துருத்தி நம்பிகாடநம்பி   4) சேதிராயர்

65. 'திருப்பல்லாண்டு' என்பதன் பொருள்,

1) திருவாகிய இலக்குமி பல்லாண்டு வாழ்க
2) செல்வத்தோடு ஆன்மா பல்லாண்டு வாழ்க
3) இறைவன் (நாம் வாழப்) பல்லாண்டு வாழ்க
4) தெய்வத் தன்மை பலவாகிய ஆண்டுகள் வாழ்க

66. 'ஆரும் பெறாத அறிவு' எனச் சேந்தனார் குறிப்பது,

1) வேத சிவாகமங்களைக் கற்ற பெரிய அறிவு
2) மெய்கண்ட சாத்திர உணர்வு 3) மற்று எவரும் பெறவியலாத சிவஞானம்
4) உலகிலுள்ள எவரும் பெறாத நல்ல அறிவு

67. திருமந்திரத்திலே கூறப்படுவன,

1) வேதங்களிலுள்ள மந்திரங்களின் நுட்பமான பொருள்
2) சைவசித்தாந்தக் கருத்துக்கள், யோகநிலைகள், ஒழுக்கநெறிகள்
3) உலகத்தில் வாழ்வாங்கு வாழும் வழிவகைகள்
4) சிவபெருமான் பற்றிய தத்துவ விளக்கங்கள்

68. தெள்ளத் தெளிந்தவர்க்குச் சிவலிங்கமாக அமைவது,

1) உள்ளம் 2) ஆணவம் 3) திருவருட் சத்தி 4] ஆன்மா

69. 'காளமணி விளக்கு' என்பதன் பொருள்,

1) பெரிய மணிகளாலான விளக்குகள் 2) இறைவனின் அழகிய விளக்குகள்
3) பெரிய ஒளி விளக்குகள் 4) பெரிய தூண்டாமணி விளக்குகள்

70. பெரிய புராணத்தின் முதல் நூல்,

1) தேவாரம் 2) திருத்தொண்டர் திருவந்தாதி
3) திருவுந்தியார் 4) திருத்தொண்டத் தொகை.

71. வானோரும் விநாயகர் மீது காதல் கொண்டு கைகூப்பக் காரணம்,

1) விநாயகர் விக்கினங்கள் போக்குவார். 2) விநாயகரைவிட உயர்ந்த கடவுள் இல்லை.
3) விநாயகரை வழிபடாவிட்டால் அருள் கிட்டாது.
4) திருவாக்கு, செய்கருமம் கைகூட்டவும், பெருவாக்கும் பெருமையும் பெருக்குவதும் விநாயகரின் அருள்.

72. பெரியபுராணம் என்ற பெயர் அமையக் காரணம்,

1) அளவால் பெரியது என்பதால் பெரியபுராணம் என்ற பெயர் வந்தது.
2) யாவரிலும் பெரியவரான சிவபெருமானின் சிறப்புக்கள் கூறுவதால் அப்பெயர் வந்தது.
3) செயற்கு அரிய அற்புதங்கள் செய்தருளிய சிவனடியார்களின் வரலாறு கூறுவதால் அப்பெயர் வந்தது.
4) பெருமை பொருந்திய புராணம் என்பதால் அப்பெயர் வந்தது.

73. பெரிய புராணத்தின் தலைவர் (கதாநாயகர்) எனக்கொள்ளப்படுபவர்,

1) திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் 2) திருநாவுக்கரசுநாயனார்
3) சேரமான் பெருமாள் நாயனார் 4) சுந்தரமூர்த்திநாயனார்

74. 'புனிதராடிய பொற்பு' எனச் சேக்கிழார் குறிப்பது,

1) அடியார்கள் இறைவனை நினைந்து ஆடிப்பாடும் சிறப்பு
2) புனிதராகிய அடியார்கள் தீர்த்தம் ஆடிய பெருமை
3) இறைவனாகிய புனிதன் அடியவர்க்காகத் திருவிளையாடல்கள் புரிந்த சிறப்பு
4) புனிதராகிய நடராசப்பெருமான் தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் நடனம் ஆடியருளிய சிறப்பு

75. 'புண்ணியக் கொழுந்து அனையவர்' எனச் சேக்கிழார் குறிப்பிடுவதன் பொருள்,

1) புண்ணியம் என்னும் கொழுந்து போன்றவர்

2) புண்ணியக் கொழுந்து அன்னையாகியவர்

3) புண்ணியமாகிய செடியின் கொழுந்து எனத்தக்கவர்

4) புண்ணியமாகிய செடியில் முளைத்த கொழுந்து போன்ற திருஞானசம்பந்தர்.

76. "ஒரு பெருந்தனிக்கூத்து" என்று நடராசரின் திருநடனம் சிறப்பிக்கப்பட்டதன் காரணம்,

1) வேறு எவராலும் ஆடமுடியாத ஒப்பில்லாத நடனம் என்பது

2) ஒருவரே ஆடுகின்ற பெரிய தனி நடனம் என்பது

3) ஆன்மாக்களின் பொருட்டு ஐந்தொழில்களையும் நிகழ்த்தி அவற்றை முத்திபெற அருளும் ஒப்பில்லாத பெரிய நடனம் என்பது

4) உலக அழிவின்போது ஒருவனாய் நின்று இறைவன் ஆடியருளும் கூத்து என்பது

77. நாவுக்கரசரின் தில்லைக்காட்சியில் அவர் அடைந்த உணர்வுநிலை,

1) பித்தர்களின் உணர்வு நிலையை ஒத்தது

2) அடியவர்கள் தம்மைப்பார்த்துத் தம்வழியில் நடராசரின் காட்சியை அநுபவித்தல் வேண்டும் என்று நடித்துக் காட்டியது.

3) மெய்ம்மறந்து பரவசநிலையிலே கருவி கரணங்கள் யாவும் உருகிய தன்மையின் வெளிப்பாடு.

4) கூத்தனோடு தாமும் சேர்ந்து பரவசமாய்க் கூத்தாடும் உணர்வு நிலை.

78. "ஐந்து பேரறிவு" எனச் சேக்கிழார் குறிப்பன,

1) மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளாலும் பெறும் அறிவு.

2) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்கள் பற்றிய அறிவு.

3) ஐந்தாகிய நிறங்களின் வேறுபாட்டினை உணர்த்தும் பெரிய அறிவு

4) மகேசுரன், மால், அயன், உருத்திரன், சதாசிவம் ஆகிய ஐந்து மூர்த்திகள் பற்றியறியும் பெரிய அறிவு.

79. "குணமொரு மூன்றும்" எனக் குறிக்கப்படுவன,

1) காமம், வெகுளி, மயக்கம்  2) சத்து, சித்து, ஆனந்தம்

3) சத்தியம், சிவம், சுந்தரம்  4) சாத்துவிகம், இராசசம், தாமசம்.

80. தில்லைக் காட்சியில் சமயகுரவர் மூவரும் தில்லைத்தலத்தைச் சிறப்பித்துப் பாடிய காரணம்,

1) தில்லையே கோயில்கள் யாவிலும் முதலிலே தோன்றியது.

2) தில்லையே தலங்கள் யாவிலும் பெரியது.

3) தில்லை என்பது தரிசிப்பவருக்கு ஞானத்தை அருளிட முத்திப் பேறு அளிக்கவல்ல ஒப்பில்லாத திருத்தலம்.

4) தில்லையே சைவசமயக் கலைகளுள்ளே தலைமையான நடனக்கலைக்கு இடமளிப்பது

81. கந்தன் என்ற சொல்லின் பொருள்,

1) ஆறு திருமேனிகள் ஒன்றுகூடப் பெற்றவன்  2) மணம் உடையவன்

3) கட்டுத்தறியில் எழுந்தருள்பவன்  4) கட்டற்றவன்

82. 'காஞ்சி மாவடி வைகும் செவ்வேள்' என்ற சொற்றொடரின் பொருள்,

1) காஞ்சியிலுள்ள மாவடி என்ற கோயிலில் எழுந்தருளிய குமரக்கடவுள்.
2) காஞ்சியிலேயுள்ள மாமர நிழலிலே எழுந்தருளும் குமரக் கடவுள்.
3) காஞ்சியில் பெரிய திருவடிகளுடன் எழுந்தருளும் குமரக்கடவுள்
4) காஞ்சியில் மாவடுக்கள் அதிகமாக விளங்குகின்ற இடத்தில் எழுந்தருளும் குமரக்கடவுள்.

83. சிவபுராணம் பத்தினுள்ளும் தலைசிறந்தது,

1) மார்க்கண்டேய புராணம் 2) பவிடிய புராணம்
3) கந்த புராணம் 4) பிரம வைவர்த்த புராணம்

84. சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்ற அரக்கர்கள்,

1) பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களதும் உருவகங்கள்.
2) சாத்விகம், இராசசம், தாமசம் ஆகிய முக்குணங்களின் உருவகங்கள்
3) ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்களதும் உருவகங்கள்.
4) காமம், குரோதம், மதம் ஆகியவற்றின் உருவகங்கள்.

85. அருணகிரிநாதர் வாழ்ந்த காலம்,

1) கி. பி. 1500 2) கி. பி. 1000 3) கி. பி. 1200 4) கி. பி. 1300.

86. அருணகிரிநாதர் இயற்றிய நூல்களிலே தலை சிறந்தது,

1) கந்தரலங்காரம் 2) கந்தரநுபூதி 3) வேல்விருத்தம் 4) திருப்புகழ்.

87. மொழிக்குத் துணையாவன,

1) இலக்கிய இலக்கணங்கள் 2) பலவகையான அறிவு நூல்கள்
3) வேத சிவாகமங்கள் 4) "முருகா" என்னும் திருநாமங்கள்

88. சகலகலாவல்லி மாலையைப் பாடியவர்,

1) குமரகுருபரர் 2) சிவப்பிரகாசர் 3) அபிராமிப்பட்டர் 4) தாயுமானவர்

89. அபிராமியின் கடைக்கண்கள் தருவனவற்றுள் சிறப்பானவை,

1) அதிகாரம், பதவி 2) செல்வம், சிறப்பு
3) நல்லன எல்லாம் 4) உலக இன்பங்கள்

90. இன்பநிலை தானே வந்து எய்தத் தாயுமானவர் வேண்டி நிற்கும் வழி,

1) கோயில்கள் தோறும் யாத்திரை செய்வது
2) மனத்தில் இறைவனை அமைத்து வழிபடுவது
3) அன்பரின் பணிசெய்ய ஆளாக்கி விடுவது
4) வலிமை கொண்ட உடலைப் பெறுவது

91. ஆகமாந்தம் எனப்படுவது,

1) வேதாந்தம் 2) சித்தாந்தம் 3) நாதாந்தம் 4) நமாந்தம்

92. ஆகமங்களின் சார்பு நூல்கள்,

1) நாரசிங்கம், விசுவான்மிகம் 2) காமிகம், வாதுளம்
3) தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம் 4) புராணம், இதிகாசம்

93. ஆகமம் என்ற சொல்லின் பொருள்,

1) தொன்று தொட்டு வரும் அறிவு 2) இறைவனால் அருளப்பட்டது

3) அநாதியான முப்பொருள் உரைப்பது 4) அறியொணாத அறிவு

94. காசுமீரத்தில் நிலவும் சைவசமயத்தின் பெயர்,

1) ஆகமாந்தம் 2) வீரசைவம் 3) பிரத்தியபிஞ்ஞா 4) சித்தாந்தசைவம்

95. ஆகமங்கள் தமிழ் நாட்டிலே சிறப்புற்ற காலம்,

1) கி. பி. 300 — 500 2) கி. பி. 100 — 300

3) கி. பி. 250 — 900 4) கி. பி. 600 — 900

96. ஸ்ரீ ஆகமப்பிரியன் எனத் தன்னைக் குறிப்பிட்ட மன்னன்,

1) மகேந்திர வர்மன் 2) விஷ்ணு சிம்மன்

3) நரசிம்ம வர்மன் 4) இராசசிம்மன்

97. ஆகமப் பொருளை முதலில் கூறும் தமிழ்நூல்,

1) திருமந்திரம் 2) திருவாசகம் 3) திருக்குறள் 4) சிவஞானபோதம்

98. திருமந்திரத்திலுள்ள ஒன்பது பகுதிகளும் தனித்தனி குறிக்கப்படும் பெயர்.

1) இயல்கள் 2) அத்தியாயங்கள் 3) காண்டங்கள் 4) தந்திரங்கள்

99. ஆகமத்தின் பிரிவுகள்,

1) சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்
2) தருமம், அர்த்தம், காமம், மோட்சம்
3) சரியை, கிரியை, யோகம், ஞானம்
4) பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்

100. உயிரை முன்னேற்ற நாம் வளர்க்கவேண்டியதாக ஆகமம் கூறும் நெறி.

1) ஞானம் 2) உடல் 3) உள்ளம் 4) அன்பு

101. ஆகமங்கள் தோன்றக் காரணமாயிருந்த நாகரிகம்,

1) ஆரியருக்குரியது 2) இந்தோ ஐரோப்பியருக்கு உரியது

3) திராவிடருக்கு உரியது 4) இந்திய மக்களுக்கு உரியது

102. 'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்' — இவ்வாறு உரைத்தவர்,

1) மெய்கண்டதேவர் 2) அருணந்தி சிவாசாரியார்

3) மறைஞானசம்பந்த சிவாசாரியார் 4) உமாபதி சிவாசாரியார்

103. சிவபெருமானைத் தியானித்து விதிப்படி வழிபடுவதற்கு நமக்குத் தகுதியளிப்பது,

1) சைவராக நாம் பிறந்தமை 2) புலாலுண்ணாமை

3) சிவதீட்சை 4) ஞானநூல்களைக் கற்றல்

104. நிராதார தீட்சைக்குத் தகுதியுடையவர்,

1) விஞ்ஞானகலர், சகலர் 2) பிரளயாகலர், சகலர்

3) விஞ்ஞானகலர், பிரளயாகலர் 4) சீவன்முத்தர், பிரளயாகலர்

105. சைவசமயாசாரத்தை அநுட்டிக்கும்படி முதலாகச் செய்யப்படும் தீட்சை,

1) சமயதீட்சை 2) விசேடதீட்சை

3) நிர்வாணதீட்சை 4) ஆசாரியபிஷேகம்

106. 'சிவோகம் பாவனை' என்பதன் பொருள்,

1) சிவனைப்போல யோகத்தில் அமர்வதாகப் பாவனை செய்தல்
2) சிவனை உமாதேவியுடன் உடனுறைவனாகப் பாவனை செய்தல்
3) சிவனுகி விட்டேன் என்ற அத்துவித நிலையிற் பாவனை செய்தல்
4) 'சிவனே நான்' என்று ஞானவழியிலே பாவனை செய்தல்

107. தீட்சைக்கு முதற்படியாக ஒழுங்கு செய்யப்படும் இடம்,

1) ஓமகுண்டம் 2) மண்டலம் 3) தீட்சைத்தானம் 4) கிரியைத்தானம்

108. சபீச தீட்சை என்பதன் பொருள்,

1) மந்திரம் செபிக்கும்படி உபதேசிக்கப்படும் தீட்சை
2) மந்திரம் செபித்துக் கிரியையும் செய்யுமாறு உபதேசிக்கப்படும் தீட்சை
3) மந்திரத்தோடு மூல அட்சரத்தையும் செபிக்கும்படி உபதேசிக்கப்படும் தீட்சை
4) மந்திரத்தோடு பூசை, வேள்வி ஆகியன செய்யுமாறும் உபதேசிக்கப்படும் தீட்சை

109. கயிலையிலே கல்லால மர நீளலிலே தெற்கு நோக்கி அமர்ந்திருக்கும் மூர்த்தி,

1) ஸ்ரீகண்டருத்திரர் 2) தட்சிணுமூர்த்தி 3) நந்திகேசுவரர் 4) கைலாசபதி

110. 'உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்ருேம்' — திருநாவுக்கரசருக்குச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய இக்கூற்றில் 'நினைப்பு' என்றது,

1) நயன தீட்சை 2) பரிச தீட்சை
3) வாசக தீட்சை 4) திருவடி தீட்சை.

111. ஞானகுருவை இறைவன் என்றே கருதக் காரணம்,

1) அவர் ஆன்மாவுக்காக ஐந்தொழில்களும் புரிபவர்
2) இறைவனின் திருவடியிலே தோன்றி அருள்பாலிப்பவர்
3) இறைவனுல் ஆன்மாவுக்கு அருள் செய்ய அனுப்பப்படுபவர்
4) ஆன்மாவுக்குத் தீட்சை செய்து முத்தி கொடுப்பவர்.

112. "ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" — இத்தொடர் அமைந்துள்ள நூல்,

1) சிவஞானபோதம் 2) சிவஞான சித்தியார்
3) சிவப்பிரகாசம் 4) திருவருட்பயன்

113. சங்கம வழிபாடு என்பதன் பொருள்,

1) இறைவழிபாடு
2) சிவம் சத்தி என்ற இரண்டும் சங்கமித்த சங்கமத்தை வழிபடும் வழிபாடு
3) சமய சங்கம் வைத்துக் கூடி வழிபடும் வழிபாடு
4) சிவனடியார்களை வழிபடும் வழிபாடு.

114. சங்கம வழிபாட்டினுல் உயர்ந்த நிலை அடைந்த நாயனுர்,

1) சுந்தரமூர்த்திநாயனுர் 2) விறன்மிண்டநாயனுர்
3) திருக்குறிப்புத் தொண்ட நாயனுர் 4) இளையான் குடிமாற நாயனுர்.

115. சிவாலயங்களிலே மூலமூர்த்திகளாய் எழுந்தருளியிருப்போர்,

1) சிவன், உமையம்மை, முருகன் 2) நடராசர், சிவகாமி
3) சந்திரசேகரர், உமையம்மை 4) சதாசிவமூர்த்தி, உமையம்மை.

116. ஆலயபூசையின்போது செய்யப்படும் 'சோடசோபசாரம்' என்பது,
1) சுவாமிக்குச் செய்யப்படும் எட்டுவகை உபசாரங்கள்
2) பதினாறுவகை உபசாரங்கள்
3) பத்துவகை உபசாரங்கள் 4) ஆறுவகை உபசாரங்கள்

117. மகோற்சவம் நினைவூட்டுவது,
1) இறைவனின் திருவருளை 2) மக்களின் பத்திப்பெருக்கை
3) அடியார்களின் குதூகலத்தை 4) இறைவனின் ஐந்தொழில்களை

118. கிராமசாந்தியிலே பூசைக்குரிய மூர்த்தி,
1) சிவபெருமான் 2) வைரவக்கடவுள் 3) சுப்பிரமணியக்கடவுள் 4) விநாயகக்கடவுள்

119. சிவபெருமான் மலையரையன் பொற்பாவையாகிய பார்வதியம்மையை மணம் புரிந்திராவிடில்,
1) உலகில் எவருக்கும் திருமணம் நடக்காது.
2) உலகிலே உயிரினங்கள் வாழமாட்டா.
3) பிரபஞ்சம் இயங்காது உயிரினங்கள் கலக்கமடையும்
4) யாவரும் சந்நியாசிகளாகவே வாழ நேரும்

120. காமிய பூசை எனப்படுவது,
1) முத்திப் பேறடையச் செய்யும் பூசை 2) ஆன்ம விடுதலைக்காகச் செய்யும் பூசை
3) திருமுறைகளை ஓதிச் செய்யும் பூசை 4) பயனைக் கருதிச் செய்யும் பூசை

121. உபவாசம் என்பதன் பொருள்,
1) பட்டினி கிடத்தல் 2) உணவைச் சுருக்குதல்
3) ஒருநாளில் ஒரு பொழுது உண்ணல் 4) கடவுளோடு மிக நெருங்கியிருந்து வழிபடல்

122. 'முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில் முற்பட எழுதிய முதல்வோன்'
1) சிவபெருமான் 2) குமரக்கடவுள் 3) விநாயகக்கடவுள் 4) வீரபத்திரக்கடவுள்

123. பிள்ளையாரது மேற்கரம் ஒன்றிலுள்ள அங்குசம் குறிப்பது,
1) அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை அருளுதலை
2) எவரையும் அழிக்கவல்ல பேராற்றலை
3) உயிர்களுக்கு எக்காலமும் காத்தலைச் செய்யும் வல்லமை
4) உயிர்களின் ஆணவத்தினை அடக்கும் ஆற்றலை

124. பிரதோஷ விரதம் உண்டாவதற்கு அடிப்படையான வரலாறு,
1) தேவர்களுக்காகத் திரிபுரங்களை எரித்தமை
2) கயமுகனை அழிக்க விநாயகக் கடவுளைத் தோற்றுவித்தமை
3) ஆலகால விடம் எழுந்தபோது தேவர்களின் கலக்கத்தினைப் போக்க, இடபதேவரது கொம்புகளிடையே நின்று நடனமாடியமை
4) மன்மதனை எரிக்க நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறியை வெளிப்படுத்தியமை

125. மகாசிவராத்திரி அநுட்டிக்கப்படும் தினம்,
1) மாசி மாதத்து வளர்பிறை பதினான்காம் நாள் 2) மாசி மாதத்து மகம்
3) மாசி மாதத்துத் தேய்பிறை நான்காம் நாள்
4) மாசி மாதத்துத் தேய்பிறை பதினான்காம் நாள்

126. சித்திரை வருடப்பிறப்பு கொண்டாடப்படும் காலம்,
1) முதுவேனிற் காலத்தின் முதல்மாதம் 2) இளவேனிற் காலத்தின் இறுதி மாதம்
3) முதுவேனிற் காலத்தின் இறுதிமாதம் 4) இளவேனிற் காலத்தின் முதல் மாதம்

| வினா | விடை | வினா | விடை | வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | 3 | (33) | 1 | (65) | 3 | (97) | 1 |
| (2) | 2 | (34) | 1 | (66) | 3 | (98) | 4 |
| (3) | 3 | (35) | 4 | (67) | 2 | (99) | 3 |
| (4) | 1 | (36) | 4 | (68) | 4 | (100) | 4 |
| (5) | 3 | (37) | 3 | (69) | 4 | (101) | 3 |
| (6) | 2 | (38) | 2 | (70) | 4 | (102) | 4 |
| (7) | 1 | (39) | 3 | (71) | 4 | (103) | 3 |
| (8) | 2 | (40) | 4 | (72) | 3 | (104) | 3 |
| (9) | 3 | (41) | 2 | (73) | 4 | (105) | 1 |
| (10) | 4 | (42) | 3 | (74) | 4 | (106) | 4 |
| (11) | 3 | (43) | 2 | (75) | 4 | (107) | 2 |
| (12) | 2 | (44) | 4 | (76) | 3 | (108) | 3 |
| (13) | 4 | (45) | 4 | (77) | 3 | (109) | 2 |
| (14) | 2 | (46) | 3 | (78) | 1 | (110) | 4 |
| (15) | 4 | (47) | 4 | (79) | 4 | (111) | 4 |
| (16) | 2 | (48) | 4 | (80) | 3 | (112) | 1 |
| (17) | 3 | (49) | 4 | (81) | 1 | (113) | 4 |
| (18) | 4 | (50) | 4 | (82) | 2 | (114) | 2 |
| (19) | 3 | (51) | 2 | (83) | 3 | (115) | 4 |
| (20) | 4 | (52) | 1 | (84) | 3 | (116) | 2 |
| (21) | 3 | (53) | 4 | (85) | 1 | (117) | 4 |
| (22) | 4 | (54) | 2 | (86) | 4 | (118) | 2 |
| (23) | 3 | (55) | 4 | (87) | 4 | (119) | 3 |
| (24) | 4 | (56) | 3 | (88) | 1 | (120) | 4 |
| (25) | 1 | (57) | 1 | (89) | 3 | (121) | 4 |
| (26) | 3 | (58) | 3 | (90) | 3 | (122) | 3 |
| (27) | 2 | (59) | 4 | (91) | 2 | (123) | 4 |
| (28) | 1 | (60) | 2 | (92) | 3 | (124) | 3 |
| (29) | 3 | (61) | 1 | (93) | 1 | (125) | 4 |
| (30) | 3 | (62) | 2 | (94) | 3 | (126) | 4 |
| (31) | 2 | (63) | 2 | (95) | 3 | | |
| (32) | 3 | (64) | 1 | (96) | 4 | | |

# பகுதி இரண்டு

## வினாக்கள்

1. 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்' என்பது திருத்தொண்டர் பெரியபுராணத்தின் முதலாம் அடி.

   (அ) இத்தகைய அரியவனாகிய சிவனது வழிபாடு சிந்துவெளியில் நிலவிய வகையினை ஆதாரங்களுடன் விளக்குக.

   (ஆ) சிவபெருமானது அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்க வழிபாடு சிந்துவெளியில் நிலவிய வகையினைத் தெளிவுபடுத்துக.

2. 'வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்' என்பது திருமந்திரத் திருவாக்கு.

   (அ) வேதம் என்ற சொல்லின் பொருள் யாது? நான்கு வேதங்கள் பற்றியும் சுருக்கமாக விளக்குக.

   ஆ) 'வேதங்களிற் காணப்படும் சமய, மெய்யியற் கொள்கைகளில் திராவிடரின் மறைமுகமான பங்களிப்பு மகத்தானது' என்ற கூற்றைத் தக்க ஆதாரங்களுடன் விளக்குக.

3. 'இருளின் நீக்கி என்னை ஒளியில் நடத்துக' — இது பிருக தாரணியக உபநிடதப் பிரார்த்தனையில் காணப்படும் ஓர் அடி

   (அ) உபநிடதங்கள் அறியாமை இருளினின்றும் நீங்கி உண்மையாகிய ஒளியைக் கண்டறிவதில் ஈடுபட்டுள்ள வகையினை விளக்குக.

   (ஆ) உபநிடதங்களிற் காணப்படும் ஒழுக்கவியற் கருத்துக்கள் சிலவற்றைத் தெளிவுறுத்துக

4. 'கொடிநிலை கந்தழி வள்ளியென்ற ………… மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' – என்பது தொல்காப்பியம்.

   (அ) கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பன யாவை ? விளக்குக.

   (ஆ) சங்ககாலத் தொகை நூல்களின் வாயிலாகத் தெரியவரும் சமய வழிபாட்டுச் செய்திகள் யாவை ?

5. 'ஓங்குபுகழ்த் தென்புகலி வேந்தன் செயல்' என்பது திருக்களிற்றுப்படியார் கூற்று.

   1. ஓங்குபுகழ்த் தென்புகலி வேந்தன் 'யாவர்' ? அவரின் வரலாற்றினைச் சுருங்கத் தருக.
   2. அவர் செய்தருளிய அற்புதங்கள் ஐந்தினை விளக்குக.

6. 'கண்ணினுற்றிருக்கயிலையில் இருந்த நின்கோலம் நண்ணி நான்தொழ நயந்தருள்புரி' — என்று திருநாவுக்கரசுநாயனார் சிவபெருமானை வேண்டுவதாகத் திருத்தொண்டர் பெரியபுராணம் உரைக்கும்

   (அ) திருநாவுக்கரசுநாயனார் திருக்கயிலைக் காட்சியைத் தரிசித்த வரலாற்றினைத் தருக.

   (ஆ) அவர் புரிந்தருளிய அற்புதங்கள் ஐந்தினை விளக்குக.

7. 'மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்துத் தோன்றி'யவர் சுந்தரமூர்த்திநாயனார் என்பது பெரியபுராணம்.

   (அ) சுந்தரமூர்த்திநாயனார் தடுத்தாட்கொள்ளப்பட்ட வரலாற்றினைத் தருக.

   (ஆ) அவர் புரிந்தருளிய அற்புதங்கள் ஐந்தினை விளக்குக.

8. திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது பழமொழி.

   (அ) திருவாசகத்தினை அருளிய மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பெருந்துறையிலே குருவுபதேசம் பெற்ற வரலாற்றினைத் தருக.

   (ஆ) மாணிக்கவாசகசுவாமிகள் புரிந்தருளிய அற்புதங்கள் ஐந்தினை விளக்குக.

9. 'சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம் சுந்தரனும் சிற்கோலவாதவூர்த் தேசிகனும்' எனச் சமய குரவர்கள் நால்வரையும் 'சிவானந்தமாலை போற்றுகின்றது.

(அ) இந்நால்வர் பெருமக்களும் மற்றும் சிவனடியார்களும் யாத்தருளிய நூல்களின் தொகுப்பு எப்பெயரால் அழைக்கப்படும்? அவற்றின் சிறப்பினைச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) திருமுறைகளில் பன்னிரண்டாவதாக இடம்பெறும் பெரிய புராணத்தில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் தரிசித்த தில்லைக்காட்சி எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது?

10. 'கந்தபுராணத்தில் இல்லாத பொருள் எந்தப் புராணத்திலும் இல்லை' என்பது பழமொழி.

(அ) கந்த புராணத்தை இயற்றியவர் யார்? கந்த புராணத்தின் பெருமைகளைச் சுருங்கத் தருக.

(ஆ) கந்தபுராணத்தின் பின்னர்த் தோன்றிய சைவப் பிரபந்தங்கள் பற்றி யாது அறிவீர்?

11. 'வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்' என்பது திருமந்திரம்.

(அ) ஆகமங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) தென்னாட்டுச் சைவசித்தாந்தத்தோடு பெரிதும் ஒத்துக் காணப்படும் வடநாட்டுக் காசுமீர சைவம் பற்றி யாது அறிவீர்?

12. 'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' என்று திருத்தொண்டத் தொகையிலே சுந்தரர் திருமூலரைப் போற்றுகின்றார்.

(அ) திருமூலர் யாத்தருளிய 'திருமந்திரம்' பற்றி நீர் தெரிந்து கொண்டவற்றைச் சுருக்கமாகத் தருக.

(ஆ) திருமூலர் போற்றும் ஆகமங்களிலே காணப்படும் சரியை முதலான நான்கு பிரிவுகளும் கூறுவனவற்றின் சாரத்தைத் தருக.

13. 'ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான்தாள் வாழ்க' என்பது மணிவாசகரின் திருவாக்கு. இது சிவபுராணத்தில் வருவது.

(அ) ஆகமம் காட்டும் வாழ்க்கை நெறிபற்றி நீர் அறிந்தவற்றைத் தருக?

(ஆ) வேத வழக்குக்கும் ஆகம வழக்குக்குமிடையே காணப்படும் வேறுபாடுகள் எவை?

14. 'அரிது அரிது மானிடர் ஆதல் அரிது' - என்பது ஔவைப் பாட்டியின் அமுதவாக்கு.

(அ) மானிடப் பிறவியிலும் சைவராய்ப் பிறக்கப் பேறுபெற்றவர்கள் தீட்சை பெற வேண்டிய அவசியம்பற்றி விளக்குக.

(ஆ) தீட்சைகளின் வகைபற்றித் தெளிவுறுத்துக.

15. 'குரு என்பவர் அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை அருள்பவர்' என்பது பொருள்

(அ) சைவசமயத்தில் குரு பெறும் சிறப்பிடத்தினை விளக்குக.

(ஆ) ஆசிரியருக்கும் ஞான குருவுக்கும் உள்ள வேறுபாடு யாது?

16. சிவபெருமான் புறத்தே சிவலிங்கம் முதலான இறைவனின் திருமேனிகளையும் குருவையும் சங்கமத்தையும் ஆதாரமாகக் கொண்டு ஆன்மாக்களின் வழிபாட்டை ஏற்றருள்வார்'

(அ) இலிங்க வழிபாடுபற்றி யாது அறிவீர்?

(ஆ) சங்கம வழிபாடாவது யாது? சுருக்கமாக விளக்குக.

17. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி.

(அ) திருக்கோயில்களில் மூர்த்தியும் பரிவார தெய்வங்களும் அமைந்திருக்கும் வகையினை விளக்குக.

(ஆ) திருவிழாக்கள் கோயில்களிலே நடைபெறுவதற்கான காரணத்தையும் அவை நடைபெறும் முறைமைகளையும் விளக்குக.

18. விரதத்தை 'உபவாசம்' எனவும் அழைப்பர்

(அ) உபவாசம் என்பதன் பொருளிலிருந்து விரதத்தின் சிறப்பினை அறிந்து கொள்ளல் எவ்வாறு?

(ஆ) விநாயகர் விரதம், கந்தவிரதம், சத்திவிரதம் என்பன எவை எவை என எடுத்துக் காட்டிச் சுருக்கமான விளக்கம் தருக.

19. சிவவிரதங்களிலே பிரதோஷம், சிவராத்திரி, திருவாதிரை என்பன முதன்மையானவை.

(அ) பிரதோஷ விரதத்தினை அநுட்டிக்கும் வகையினை எழுதுக.

(ஆ) சிவராத்திரி விரத அநுட்டானம் பற்றி விளக்குக.

20. இறையுணர்வை வளர்க்கவும், மனம், வாக்கு, காயம் என்பவற்றைப் பரிசுத்தம் செய்துகொள்ளவும் பண்டிகைகள் எனப்படும் விசேட நாள்கள் உகந்தவை.

அ) பண்டிகைகள் இவை இவை என எடுத்துக்காட்டி அவற்றை அநுட்டிக்கும் வகைகளையும் தெளிவாக்குக.

(ஆ) தீபாவளி தோன்றிய வரலாற்றினை விளக்குக.

21. தைப்பொங்கல் சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் நன்னாள்.

(அ) தைப்பொங்கலன்று நாம் சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்கான காரணத்தினை விளக்குக.

(ஆ) தைப்பொங்கல் கொண்டாடப்படும் வகையினை விளக்குக.

4

# பகுதி இரண்டு

## விடைகள்

1) (அ) இந்தியாவின் வடமேற்கு எல்லையில் சிந்துநதி பாயும் பள்ளத்தாக்கில் ஆரப்பா. மொகஞ்சதாரோ என்ற இரு தலைநகரங்களைக் கொண்டதும் ஏறக்குறைய ஆயிரம் மைல்கள் இடைவெளி உடையதுமான சிந்துவெளியில் கி. மு. 3000 ஆண்டளவில் சிறந்த தொரு நாகரிகம் நிலவியது. இவ்விடங்களிலே புதைபொருளாராய்ச்சி நடத்திச் சில இலச்சினைகளும் உருவச்சிலைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஓர் இலச்சினை யோகத்தில் அமர்ந்திருக்கும் கடவுள் ஒருவரைக் காட்டுவதாகும். இக்கடவுளது தலையில் உட்குவிந்த இரு கொம்புகள் காணப்படுகின்றன. கொம்புகளுக்கிடையில் இலைக் கொத்துப் போல ஒன்று உள்ளது. தலையின் வலப் புறத்திலும் இடப்புறத்திலும் புடைப்புக்களாகத் தோன்றுவனவற்றை இருமுகங்களாகக் கருதி, சேர். ஜோன் மார்ஷல் இக் கடவுளை 'மும்முக மூர்த்தி' என்றும் 'மூந்துசிவன்' என்றும் அழைத்தார். இம்முகங்கள் படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழில்களையும் குறிப்பனவாகக் கொள்வர். ஆடையின்றி நிர்வாண கோலத்தில் இருப்பது, பிற்காலத்தில் சிவனை 'நக்கன்' (நிர்வாணி) என அழைத்ததை நினைவூட்டுகிறது. பத்மாசனத்தில் இருக்கும் இக்கடவுளைச் சூழ்ந்து யானை, புலி, காண்டா மிருகம், எருமை ஆகிய மிருகங்கள் காணப்படுகின்றன. இவை சிவனைப் பசுபதி என அழைப்பதற்கும் பொருத்தமாக உள்ளன. யோகிவரனை சிவபெருமானையே இவ்விலச்சினை குறிப்பதாகப் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

(ஆ) ஆரப்பா நகரத்தில் கருநிறக் கல்லொன்று கண்டெடுக்கப்பட்டது: இது சிவலிங்கம் எனக் கருதப்படுகின்றது. மேலும் கூம்பு வடிவக் கற்கள் பல கிடைத்துள்ளன; இவையும் சிவலிங்கத் திருமேனிகள் ஆகலாம். இலிங்கத்தின் மேற்பகுதி சிவபாகம், பீடப்பகுதி சத்திபாகம்; சத்தியும் சிவமும் இணைந்து உலகைப் படைப்பதாகிய தத்துவத்தைச் சிவலிங்கம் உணர்த்தும். உலகின் தோற்றம், ஒடுக்கம், படைத்தல் முதலாகிய ஐந் தொழில்கள் ஆகியவற்றையெல்லாம் வெளிப்படுத்திச் சைவமக்களால் வழிபடப்படுவதும், சிவாலயங்களிலே கருவறைகளில் எழுந்தருளியுள்ளதுமான சிவலிங்கத்தைச் சிந்து வெளி மக்கள் வழிபட்டுவந்தனர் என்பதற்கு இங்குக் கிடைத்த கற்கள் சான்றுகளாக உள்ளன.

2. (அ) வேதம் என்ற சொல்லின் பொருள் அறிவு என்பதாகும். வேதங்கள் இறைவனால் அருளப்பட்டவை என்பர். இவற்றை நான்காக வகுத்தவர் வேதவியாசர். இவற்றுள்ளே காலத்தால் மிகப்பழைமையானதாகக் கொள்ளப்படுவது இருக்கு வேதமாகும்.

1008 பாசுரங்கள் கொண்ட இருக்குவேதம், பத்து மண்டலங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் ஒவ்வோர் இருடிக்கு இறைவனால் வெளிப்படுத்தப் பட்டதாகவும். ஒவ்வொன்றும் அவ்வவ்விருடியின் பெயரால் அழைக்கப்படுவதாகவும் கொள்ளப்படுகின்றது. இந்திரன், அக்கினி, சோமன், வருணன், ஆகிய தெய்வங்கள் இருக்குவேதத்தில் முதன்மை வாய்ந்த தெய்வங்களாக உள்ளனர். அடுத்து உருத்திரனும் விஷ்ணுவும் இடம் பெறுவர். பெரும்பாலும் இயற்கை வழிபாடே இருக்கு வேதத்தில் முதன்மைபெறல் காணலாம். பல தெய்வ வழிபாடு நிலவிய போதிலும் 'தெய்வம் ஒன்றே' என்ற கருத்தும் நிலவியமைக்கு "உள்பொருள் ஒன்றே அதனை அக்கினி என்றும் யமன் என்றும் மாதரிசுவன் என்றும் ஞானிகள் பலவாறு கூறுவர்" என்ற இருக்குவேதப் பாடல் சான்றாகும். இருக்குவேதத்திலே சூரியனை அழைத்து வழிபடும் காயத்திரி மந்திரம் முதன்மை பெறுகின்றது.

இருக்கு வேதத்திலிருந்து தெரிந்து ஒழுங்கு செய்யப்பட்டுத் தெய்வவழிபாட்டின்போது பாடப்படும் இசைப்பாடல்களின் தொகுப்பே சாமவேதமாகும். (சாமம் - இசை) சமய குரவர்கள் இசையோடு தமிழ்ப்பாமாலையைச் சிவனுக்குச் சாத்த வழிகாட்டியவை சாமவேதப் பாடல்கள் என்பர்.

யசுர்வேதம் யாகக் கிரியைகளுக்கு முதன்மையளிப்பதாகும். பாட்டிலும் உரைநடையிலும் அமைந்த இவ்வேதம், கிருஷ்ண யசுர்வேதம் (கருநிற யசுர்வேதம்) சுக்கிலயசுர் வேதம் (வெண்ணிற யசுர்வேதம்) என்ற இருபிரிவுகள் கொண்டது. இயற்கை வழிபாட்டு

முறைமைகள் இருக்கு வேதத்திற் போல இவற்றில் இல்லை. யாகக் கிரியை முறைகளால் வழிபடுதலே யசுர்வேதத்தில் முதன்மை பெறுகின்றது. கிரியைக்குரிய புரோகிதர் யசுர் வேதத்தில் மேல் நிலை அடைகிறார். சிவவழிபாடு உருத்திரவழிபாட்டின் இடத்தைப் பெற்று முதன்மையடைவதையும் யசுர்வேதத்தில் காணலாம். ஸ்ரீருத்திரம் எனவும் சதருத்திரியம் எனவும் சிவனை நூறு மந்திரங்களால் வழிபடவும் வகை செய்தது யசுர் வேதமே. சங்கரன், சம்பு, சிவன், சிவதரன், நீலக்கிரீவன், பசுபதி என்பன யசுர்வேதத்தில் சிவனுக்கு வழங்கும் நாமங்கள். இந்துவெளி மக்களிடமிருந்து ஆரியர் சிவவழிபாட்டினைப் பெற்றுத் தமது வழிபாட்டில் இணைத்துக்கொண்டமைக்கு யசுர்வேதத்தில் ஆதாரங்கள் உள்ளன எனலாம். இன்று சிவனை 1000 நாமம் கூறிவழிபடும் அருச்சனை முறைக்கும் (சகஸ்ரநாமார்ச்சனை) யசுர்வேதமே வழிவகுத்தது.

அதர்வவேதம் வேள்விகளுக்கு முக்கியத்துவம் அளியாது மந்திரம், மாயம், மருந்து முதலியவற்றிற்கு முதன்மை வழங்குகின்றது. செய்யுள் வடிவில் வசியமந்திரங்கள், செப மந்திரங்களைப் பெருமளவு உள்ளடக்கியது அதர்வவேதம். ஆரியருக்கு முன் இந்தியாவில் வாழ்ந்த மக்களின் வழிபாடுகள், சமய ஆசாரங்கள், வைத்திய முறைகள் என்பவற்றை அறிந்துகொள்ள அதர்வவேதம் உதவ வல்லதாகும்.

ஆ) இருக்கு வேதத்தில் முதன்மை பெற்ற இந்திரன், அக்கினி, வருணன், சோமன், சூரியன், பூஷன், பர்ஜன்னியன் முதலான தெய்வங்கள் முதன்மையை இழக்கின்றனர். மூன்று பாசுரங்கள் மட்டும் பெற்ற உருத்திரன் முன்னணிக்கு வந்து யசுர்வேதத்தில் சிவனாகின்றான். சிவவழிபாடு சிந்துவெளி மக்களுக்கு (திராவிடர் எனப்படும் மக்களுக்கு) உரியது. சிவன் செந்நிறம் உடைய கடவுள். 'ருதிர' என்று அதனை மொழிபெயர்த்த ஆரியர் உருத்திரன் என்னும் புயற்கடவுளோடு ஒற்றுமையுடைமை கண்டு அவனைச் சிவனாக வழிபட்டமை குறிப்பிடத்தக்கது. இது போன்றே இளமையும் வீரமும் பொருந்திய முருகன் என்ற தமிழ்த் தெய்வத்தைக் 'குமார' (இளையோன்) என்ற பெயரால் தமது தெய்வமாக்கினர் ஆரியர். வேதவழிபாடு வேள்வி முறையைப் பின்பற்றியது. அதனோடு திராவிடரின் பூசைமுறையும் சேர்க்கப்பட்டது. மெய்யியற் கொள்கையிலும் திராவிடரின் கருத்துக்கள் பின்பற்றப்பட்டமைக்கு ஆதாரங்கள் உண்டு. உபநிடதக் கருத்துக்கள் பலவும் திராவிடச் சிந்தனைக் கலப்பு உடையவை.

3. அ) உபநிடதங்களிலே கருத்து வேறுபாடுகள் பல உள்ளன. ஆயினும் பிரமம், ஆன்மா பற்றிய தெளிவான விளக்கங்களையும் அவை தருகின்றன. எல்லா வடிவங்களுக்கும் எல்லா வகைத் தோற்றங்களுக்கும் பிரமமே முதலாகவும் முடிவாகவும் உள்ளது என்பது உபநிடதங்களின் முடிவு. காலம் கடந்ததும், குணங் கடந்ததும், பொறிகளாலே காணவொண்ணாததுமான அப் பரம்பொருள் ஒவ்வோர் உயிரிலும் அமர்ந்து அதனை இயக்குகின்றது. அதுவே யாவிற்கும் ஆதாரம். பிரமமே மக்களின் உயிர் என்பதும் பொருந்தும். அப்பிரமத்தை இடையறாது தியானித்து உணர்வதே ஞானம் என்பதும் உபநிடதங்கள் வலியுறுத்தும் உண்மையாகும். பிரமஞானம் பெற்றவன் பிறவாநிலையைப் பெற்று வீடுபேற்றிற்கு உரியவனாவான். பிரமத்துடன் இரண்டறக் கலப்பதே வீடுபேறு. இவை யாவும் உபநிடதங்களின் வாயிலாக வெளிப்பட்டு அறியாமை இருளைப் போக்குவனவாகும்.

ஆ) பிரமஞானத்தையும் உலகியல் வாழ்வினையும் நெறிப்படுத்த உதவுபவர் குரு ஆவார். அவரை அடைந்து குருகுலவாசம் செய்து பயபத்தியுடன் தொண்டுகள் செய்வதால் சீடன் மேன்மை பெறுவான். குரு சீடனைத் தன் மகன்போலவே பாவித்து அவனுக்காகவும் பரம்பொருளிடம் வேண்டுவார். கடோபநிடதத்தில் குரு தமக்காகவும் சீடனுக்காகவும் பிரார்த்தனை புரிவது குறிப்பிடத்தக்கதாகும்.

உண்மை பேசுக. தருமம் புரிக. கற்பதைத் தவிர்க்காதே.
தாயைத் தெய்வமாக வணங்கு.
தந்தையைத் தெய்வமாக வணங்கு.
குருவைத் தெய்வமாக வணங்கு.

என்று தைத்திரீய உபநிடதம் உபதேசிக்கின்றது. உலகம் முழுவதுமே ஏற்றுக்கொள்ளக்கூடிய அறிவுரைகள் இவை என்பதற்கு ஐயம் இல்லை.

''பொய்ம்மையினின்றும் நீக்கி உண்மையின் வழியில் என்னை நடத்துக, இருளிலிருந்து நீக்கி என்னை ஒளியில் நடத்துக, மரணத்தினின்றும் விடுவித்துச் சாகா நிலைக்கு வழிகாட்டுக'' என்ற பிருகதாரணியக உபநிடதக் கூற்றும் உண்மை விருப்பத்தையும். அறியாமை

யிலிருந்து விடுபடும் வேட்கையையும், சாவாத முத்தி நிலையில் கொண்ட அவாவையும் புலப்படுத்துகின்றது. ''நாம் அநுபவிப்பவை யாவும் இறைவன் அருளியவை; அவை கொண்டு நாம் நிறைவு காணவேண்டும். அவற்றுக்கு நாம் உரிமை கொண்டாடலாகாது'' என்னும் உபநிடத அறிவுரை மகாத்மாகாந்தியை மிகுதியும் கவர்ந்ததாகும்.

4. அ) கொடிநிலை என்பது சூரியனைக் குறிப்பதாக மறைமலையடிகள் கொண்டார். ஒளி, வளம் சத்தி என்பவற்றை வழங்கும் சூரியனை வழிபட்டமை போலவே சங்ககாலத்திலே தமிழரும் வழிபட்டனர். கந்தழி என்பது அக்கினி என்பர். உணவாக்கத்திற்கும், இரவின் இருள் நீக்கவும் அக்கினி உதவியமையால் அதனையும் அக்காலத்தவர் வழிபட்டிருக்கலாம். வள்ளி என்பது சந்திரன் எனக் கொள்வர். இரவில் ஒளி, குளிர்மை, இன்பம் ஈந்தமை காரணமாகச் சந்திரனை வழிபட்டதும் பொருத்தமே. எனினும் பிற்காலத்து உரையாசிரியர்களின் கருத்துக்கள் இம் மூன்றிற்கும் வெவ்வேறுபட்டனவாயிருந்தமை ஏற்கத்தக்கதாயில்லை.

ஆ) சங்ககால மக்கள் தம் வழிபடு கடவுளைக் கல்லாலோ மரத்தாலோ ஆன தறியிலே வைத்து வழிபட்டதாய்த் தெரிகின்றது. தறியைக் கந்து என அழைத்தனர். சமாதான காலங்களிலே கந்துகளில் வழிபாடு நிகழ்த்துதல் சிறப்பாக நடந்து வந்தது. இந்தக் கந்துகள் பொதியில் எனப்படும் பொது இடங்களிலே (அம்பலங்களிலே) வைக்கப்பட்டிருந்தன. கந்துகளின் அடிப்பாகம் 'மாந்தாள்' என்று பெயர் பெற்றது. கருந்தாள் என்றும் அழைக்கப்பட்டது. பெருத்ததும் கறுத்ததுமான தன்மைகளால் இப்பெயர்கள் வழங்கின. கந்துகள் நிறுவப்பட்ட இடங்களிலே பலிபீடங்களும் அமைக்கப்பட்டன. பலிபீடங்களுக்கு 'இட்டிகை' என்ற பெயர் வழங்கியது. இட்டிகையில் மலர்தூவி வழிபாடு முறைமை நிலவியது. போர்க்காலங்களில் அம்பலங்கள் கைவிடப்பட்டுக் கந்துகள் பாழாகிக் கிடந்த செய்திகளை அகநானூறு, பட்டினப்பாலை முதலிய சங்கநூல்களின் வாயிலாக அறியலாம். கந்து என்பது சிவலிங்கமே என்று மறைமலையடிகள் கொண்டார். பழைய உரையாசிரியரான நச்சினார்க்கினியார், டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆகியோரும் இக்கருத்தையே கொண்டனர். சங்கத்தொகை நூல்களிலே சிவன், முக்கட்செல்வன், கறைமிடற்றுஅண்ணல், ஆலமர் செல்வன் முதலாகிய பெயர்களால் அழைத்து வழிபடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. மேகத்தையும் கங்கையையும் தரித்தவன், வேதத்தை வாயில் உடையவன், வேதங்களை அந்தணருக்குச் சொன்னவன், உமாதேவியைத் தன் உடலிற் பாதியாகக் கொண்டவன், முப்புரம் எரித்தபொழுது பாண்டரங்கக் கூத்தினை ஆடியவன், எரித்த நீற்றை உடலில் பூசியவன், கொடுகொட்டிக் கூத்தினை ஊழி இறுதியில் ஆடியவன் என்றெல்லாம் சிவன் பற்றிய செய்திகள் சங்கநூல்களிலே காணப்படுகின்றன. சிவன் மட்டுமன்றி முருகன், மாயோன் (கண்ணன்) காடுகிழாள் (கொற்றவை) ஆகிய தெய்வங்களும் வழிபாட்டிற்கு உரியவராயினர்.

5 (அ) ஓங்கு புகழ்த் தென்புகலி வேந்தன் என்பது, திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரைக் குறிப்பதாகும். சோழநாட்டிலுள்ள சீர்காழிப் பதியிலே சிவபாதவிருதயர் என்ற அந்தணரும் பகவதியார் என்ற அவர் மனைவியாரும் சைவத்தமிழுலகம் செய்ததவப்பயனால் அவதரித்த இவர் மூன்று வயதிலேயே உமையம்மையின் ஞானப்பாலருந்தும் பேறு பெற்றார். இதனால் சிவனடியே சிந்திக்கும் சிவஞானம் இவருக்குக் கைவரப்பெற்றது. சிவபெருமானே பொற்றாளம், முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னங்கள், படிக்காசு என்பனவற்றை அவ்வப்போது வழங்கப் பெற்றுத் தமிழ் நாடெங்கும் உள்ள சிவத்தலங்களுக்குச் சென்றார்; சைவமணம் எங்கும் கமழவைத்தார்; பாண்டி நாட்டிலே சமணஇருளை ஓட்டினார்; தேவாரங்கள் பாடியருளினார்; பல அற்புதங்களை நிகழ்த்தினார்; இறுதியில் தமது பதினாறுவது வயதிலே தமக்காக அமைக்கப்பட்டிருந்த திருமணப்பந்தரிலே மூட்டப்பெற்ற ஓமத்தீயே சோதிப்பிழம்பாக அதனுள்ளே திருமணம் காணவந்த சிவனடியாரோடு இறங்கிச் சிவசாயுச்சியத்தை அடைந்தார்.

(ஆ) பாலறுவாயரான திருஞானசம்பந்தப்பிள்ளையார் செய்தருளிய அற்புதங்கள் பலவாகும். (1) இவர் திருவீழிமிழலையிலே மடத்தில் தங்கியிருந்த காலத்தில் பஞ்சத்தால் அடியார்கள் வாடுவது கண்டு இரங்கினார். இறைவனை வேண்டிப் பாடியதால் நாள்தோறும் இவருக்கு இறையருளால் படிக்காசு கிடைத்தது. அது கொண்டு அடியார்களின் பசிப்பிணி போக்கியருளினார். (2) திருமறைக் காட்டிலே பலகாலமாகத் திறவாதிருந்த கோயிற் கத

வினைத் திருநாவுக்கரசர் பதிகம் பாடித் திறந்தருள, இவர் திருக்கதவம் அடைக்கப் பாடியருளினார். (3) திருநாவுக்கரசரோடு திருமறைக் காட்டுமடத்திலே தங்கியிருந்தபொழுது பாண்டிமாதேவியும் அமைச்சர் குலச்சிறையாரும் அனுப்பிய தாதினை ஏற்று மதுரை சென்று தங்கினார். இவர் தங்கியிருந்த மடத்திற்குப் பாண்டியனின் அநுமதியோடு சமண குருமார் எரியூட்டினர்; சம்பந்தப் பெருமான் அவர்கள் மூட்டிய நெருப்பானது 'பையவே சென்று பாண்டியற்காகவே' எனப்பாடியதும், அது அவ்வாறே சென்று பாண்டியனில் வெப்புநோயாகப் படர்ந்தது. சமணகுருமாரால் போக்கமுடியாதுபோன அவ்வெப்பு நோயைத் திருநீற்றுப்பதிகம் பாடி இவர் போக்கியருளினார். சமணரோடு அனல்வாதமும் புனல்வாதமும் புரிந்து (நெருப்பிலே பதிகம் எழுதிய ஏட்டை இட்டுப் பசுமையாக எடுத்தல்; நீரிலே தேவாரம் எழுதிய ஏட்டையிட்டு எதிரேறச் செய்தல்) அவர்களை வென்று கழுவேற வைத்தார், கூன்பாண்டியனை நின்றசீர் நெடுமாறனாக்கினார். இப் பெருமானின் பெரும் பணியால் மீண்டும் பாண்டிநாட்டிலே திருநீற்றின் ஒளி விளங்கிப் பொலிவுலாயிற்று. (4) திருமயிலாப்பூரிலே சிவநேசர் என்பாரின் மகளான பூம்பாவை பாம்பு தீண்டி இறந்துபோனாள். அவளின் எரித்து எஞ்சிய எலும்பைச் சிவநேசர் ஒருகுடத்துள் இட்டுச் சம்பந்தர் வரும்வரை காத்திருந்தார். சம்பந்தப் பெருமான் திருவொற்றியூரில் சிவநேசரைக் கண்டு அவரைத் திருமயிலாப்பூருக்கு அழைத்துவந்து இறைவன் மீது பதிகம்பாடி எலும்பை மீண்டும் பழைய பெண்ணுரு அடையச் செய்தருளினார். (5) திருமருகலிலே தன் பெற்றோருக்குத் தெரியாத தன்மைத்துனனோடு வந்து பெண்ணொருத்தி தங்கியிருந்தாள். இருவரும் மணமுடிக்க நினைந்திருந்தனர். இரவில் இருவரும் படுத்துறங்கிய காலத்து அப்பெண்ணின் தலைவனாகிய வணிகனைப் பாம்பு தீண்டி அவன் இறந்துபோனான். இப்பரிதாபத்துக்கு இரங்கிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் பதிகம்பாடி இறந்த வணிகனை எழுப்பியருளினார்.

6. அ) திருநாவுக்கரசு நாயனார் தென்கயிலையாகிய காளத்தியைத் தரிசிக்க "விற்றூணொன்றில்லாத" எனத் தொடங்கும் திருத்தாண்டகத்தைப் பாடினார். "இனி வடகயிலைக்குச் சென்று சிவபெருமான் அங்கு அமர்ந்தருளும் திருக்கோலக் காட்சியைத் தரிசித்தல் வேண்டும்" என்று அவர் தீர்மானித்தார். அத்தீர்மானத்தினை நிறைவேற்றக் கால்நடையாகவே புறப்பட்ட அவர் தெலுங்கு, கன்னடம், மாளவம் முதலிய நாடுகள் கடந்து காசியையடைந்து விசுவநாதரைத் தரிசித்து யாத்திரையைத் தொடர்ந்தார். தம்முடன் வந்தவரை நீத்து இலை, கிழங்கு, பழம் உண்பதையும் விடுத்து கல் நிறைந்த காட்டிலே கடுகி நடந்தார். கால்கள் தேய்ந்தன. கரங்களால் தாவிச்சென்றார். கரங்கள் தேய்ந்ததும் மார்பினால் ஊர மார்பும் தேய்ந்தது. எலும்புகள் முறிந்தன. உடலும் தேய மேலும் நகரமுடியாமல் களைத்துக் கிடந்தார். அந்தவேளையில் சிவபெருமான் முனிவர் உருவில் அவர் முன்பு தோன்றி, "திருக்கயிலாயத்தை மனிதர் சென்று அடைவது இயலாது. ஆகவே திரும்பிச் செல்க" என்று திருவாய் மலர்ந்தருளினார். அப்பரோ "எம்மை ஆளும் தலைவரான சிவபெருமான் திருக்கயிலாயத்தில் எழுந்தருளிய திருக்காட்சி காணுமல் அழியும் உடலுடன் திரும்பேன்" என்று உறுதியாகச் சொன்னார். அவர் கூறியதால் அருள் மிகுதியான சிவபெருமான் தமது திருவுருவினைக்காட்டி அப்பரின் உடல் ஊனங்களைப் போக்கினார். "இந்தத் தடாகத்தில் மூழ்கினால் நீ திருவையாறடைவாய் அங்குத் கைலாயக் காட்சியைக் காட்டியருள்வோம்" என்று திருவாய் மலர்ந்தார். அவ்வாறே அப்பர் தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றை அடைந்தார்; அங்குத் திருக்கயிலாயக் காட்சியைக் கண்டு மகிழ்ந்து "மாதர்ப்பிறைக் கண்ணியானை" எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

(ஆ) பல்லவமன்னன் சமணகுருமார் தூண்டுதலால் நீற்றறையிலிட்டும், நஞ்சுகலந்த பாற்சோறு அளித்தும், யானையின் காலின் கீழ் மிதிக்க விட்டும், கல்லிலே கட்டிக் கடலில் விட்டும் வருத்தியபொழுது பதிகங்கள் பாடிச் சிவனருளால் திருநாவுக்கரசுநாயனார் தப்பிப் பிழைத்து முன்னரிலும் பேரின்பம் அடைந்தார். திருமறைக்காட்டுக் கோயிற்றிருக்கதவைப் பதிகம் பாடித் திறப்பித்தார்; திருவீழிமிழலைத் திருமடத்தில் சிவபெருமானிடம் நாள்தோறும் படிக்காசு பெற்று அடியார்களுக்கு அன்னதானம் அளித்து அவர்களின் பசிப்பிணியைப் போக்கினார்; சிவனருளால் திருவையாற்றிலே திருக்கைலாயக் காட்சியைத்

தரிசித்தார்; அப்பூதியடிகளின் மகனை மூத்த திருநாவுக்கரசைப் பாம்பு தீண்டி அவன் இறக்கத் தம் பதிகத்தின் மூலம் சிவனை வேண்டி அவனை உயிர்ப்பித்தார்.

7. (அ) திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே, ஆதிசைவர் குலத்திலே சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் அருந்தவப் புதல்வராய்த் தோன்றிய சுந்தரமூர்த்திநாயனார், நரசிங்கமுனையர் என்ற மன்னரால் வளர்க்கப் பெற்றுத் திருமணத்திற்கு உரிய வயதை அடைந்தார். அவருக்குப் புத்தூரில் வாழ்ந்த சடங்கவி சிவாசாரியாரின் மகளை மணம் பேசித் திருமண நாளும் நிச்சயிக்கப்பட்டது. உரிய நாளில் மன்னவர் திருவும் வைதிகத் திருவும் பொலிய அலங்காரம் செய்துகொண்டு உறவினர் சூழ்ந்துவர அவர், புத்தூர் சென்று திருமணப் பந்தலையடைந்து மணவறையில் அமர்ந்திருந்தார். திருக்கைலாயத்தில் சுந்தரரின் திருமணத்தின்போது வந்து தடுத்தாள்வதாக உறுதி வாக்கருளிய சிவபெருமான், மணப்பந்தருக்குக் கிழப்பிராமண வடிவில் எழுந்தருளினார். சுந்தரரின் பாட்டனாரான ஆரூரர் (சுந்தரரது பிள்ளைத் திருநாமம் நம்பியாரூரர் என்பதே) தாமும் தம் பரம்பரையினரும் வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு வழிவழி அடிமைகள் என எழுதியதாக ஏடொன்றைக் காட்டி வாதாடிச் சுந்தரரை அடிமையாகக் கொண்டார். பின் தமது இல்லத்தைக் காட்டுவதாகச் சுந்தரரையும் உறவினரையும் அழைத்துச் சென்று வெண்ணெய் நல்லூர்க் கோயிலினுட் சென்று மறைந்தருளினார். சுந்தரர் கழிவிரக்கமடைந்து வெண்ணெய் நல்லூர்ப் பெருமானை மன்னிக்கருளுமாறு குறையிரந்தார். சிவபெருமான், 'எம்மைச் சொற்றமிழ் பாடு' என்று சுந்தரருக்குப் பணிக்குப் 'பித்தா' என்று அடியெடுத்தும் கொடுத்தருளினார். சுந்தரர் 'பித்தா பிறை சூடி' எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தினைப் பாடி, அன்று தொட்டுத் தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பதிகம் பாடித் தொண்டுகள் பூண்டு ஒழுகி வந்தார்.

(ஆ) சிவபெருமானின் அருளினாலே பன்னீராயிரம் பொன் பெற்ற சுந்தரர் அதனை மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்தார்; குண்டையூர்க்கிழார் என்ற செல்வர் அளித்த நெல்லைப் பரவையார் இல்லத்திற் சேர்க்குமாறு இறைவனை வேண்டி அவனருளால் அவனது பூதகணங்கள் நெற்குவையைப் பரவையார் மனைக்குக் கொண்டு வரப்பெற்றார்; சித்தவட மடத்திலே அந்தணர் வடிவில் வந்த சிவபெருமானின் திருவடி தம் சிரசைத் தீண்டும்பேறு பெற்றார்; பரவையாருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாது திருவாரூர் செல்ல முற்பட்டு அதனால் கண்களை இழந்து மீண்டும் சிவனருளால் பார்வை பெற்றார். திருப்புக்கொளியூரிலே பல ஆண்டுகளுக்கு முன் முதலைவாய்ப்பட்டு இறந்த அந்தணச் சிறுவனைப் பதிகம் பாடி முதலைவாயிலிருந்து மீட்டித்து உயிருடனும் வயதுக்குரிய வளர்ச்சியுடனும் வெளிப்படச் செய்தார்.

8: (அ) அரிமர்த்தன பாண்டியனின் முதலமைச்சராய் விளங்கிய வாதவூரர், அவன் ஏவலை ஏற்று அவன் தந்த பொன்னுடன் கீழைக் கடற்கரையிலுள்ள திருப்பெருந்துறைக்குக் குதிரைகள் வாங்குவதற்குச் சென்றார். அவர் தம்முடன் வந்த பரிவாரத்தோடு பூஞ்சோலை ஒன்றினை அண்மிய பொழுது சிவநாமம் அங்கு ஒலித்தது. அந்த ஒலியானது அவரின் செவியில் வீழ்ந்ததும் அவர் தாம் வந்த பணியை மறந்தார்; சோலையினுட் சென்றார்; அங்கே குருந்தமர நீழலிலே சிவபெருமான் குருமணியாகச் சீடர்கள் புடை சூழ எழுந்தருளியிருக்கும் கோலத்தைக் கண்கள் களிப்பக் கண்டார்; தம்மை ஆட்கொள்ளவே குருமணி எழுந்தருளியிருப்பதாகிய உணர்வு அவருக்கு உண்டாயிற்று. மெய்ம்மயிர் சிலிர்த்தது. உடல் புளகித்தது. வாதவூரர் குருமணியின் திருப்பாதங்களில் வீழ்ந்து பணிந்தார். "அடியேனை ஆட்கொண்டு உய்வித்து அருளுக" என்று வேண்டினார். குருமணியாகிய சிவனும் தமது திருப்பாதங்களை வாதவூரர் தம் சிரசிலே சூட்டிப் பரிசதீட்சையால் அவரை ஆட்கொண்டருளினார்.

(ஆ) மாணிக்கவாசகருக்காகச் சிவபெருமானே குதிரையாளாய் நரிகளைப் பரிகளாக்கி வந்து பாண்டியனிடம் கையளித்தார். அன்று இரவே மீண்டும் பரிகளை நரிகளாக்கி மணிவாசகரைப் பாண்டியன் சிறையிலிட்டு வருத்த வைத்தார்; தொடர்ந்து வைகையைப் பெருக வைத்தும், வந்தி மூதாட்டிக்காகக் கூலியாளாய் எழுந்தருளி வந்தியின் பங்கை அடைக்காது பாண்டியனிடம் பிரம்படி பெற்றும் தாம் அடியார்க்கு எளியர் என்பதைக் காட்டி மணிவாசகரை ஆட்கொண்டார். இவ்வாறு மணிவாசகருக்காக இறைவன் அற்புதங்கள் நிகழ்த்தியதோடு தம் அருளால் மணிவாசகரையும் அற்புதங்கள் நிகழ்த்த வைத்தார்;

மாணிக்கவாசகர் இறையருளால் பௌத்தரை வாதில் வென்றார். ஊமைப் பெண்ணைப் பேசுமாறு வைத்தார்; திருவாசகம், திருக்கோவையாரைத் தாம் சொல்ல இறைவனே எழுதுவதாகிய பெரும் பேற்றினையும் அடைந்தார்; திருவாசகத்திற்குப் பொருள் கூறுவதாக உரைத்துத் தம்மைத் தொடர்ந்த யாவரும் காணச் சிதம்பரத்துள்ளே புகுந்து சோதியிற் கலந்தார்.

9. (அ) திருமுறைகள் என்று அழைக்கப்படும். இவை தெய்வத்தன்மை பொருந்திய அடியார்களினால் பாடியருளப் பெற்றமையால் திரு என்ற அடைபெற்றும் அவை முறையாகத் தொகுக்கப்பட்டுள்ளமையால் முறைகள் என்ற சிறப்புப் பெயர் பெற்றும் விளங்குகின்றன. இவையாவும் அருட்பாக்கள்; சிவனருளால் அவன்தாள் வணங்கிப் பாடப்பட்டமையால் அற்புதங்கள் பல நிகழக் காரணமாயின. இவை பிரணவத்தின் விரிவு என்பர். தோடுடைய என்ற ஓங்கார (பிரணவ) ஒலியில், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது தேவாரத்தோடு தொடங்கி, உலகெலாம் என்ற மகர ஒலியில் முடிகின்றன. இவற்றை ஓதுபவரது உள்ளங்கள் தூய்மையாகும். பிணிக்கு மருந்தாயும் பிறவிக்கடல் கடக்கப் புணையாயும் விளங்கும் சத்தி திருமுறைகளுக்கு உண்டு.

(ஆ) (1) சம்பந்தர் தில்லைக்காட்சி

திருஞானசம்பந்தர் கடல்சூழ்ந்த சீர்காழிப் பதியின் புண்ணியக் கொழுந்து போன்றவர். தலைவராகிய சிவபெருமான் அவருக்கு அளித்த உண்மை ஞானம் ஒத்ததே தில்லை அம்பலம். அங்கு ஒப்பற்ற ஞானத்தில் எழுவதே நடராசரின் ஆனந்தத் திருக்கூத்து. அக்கூத்தின் அழகைத் தம் கண்களாலே நிறைவாகக் கண்டு ஏற்பட்ட பெருமகிழ்ச்சியோடு சம்பந்தர் போற்றிப் பாடலானார்.

(2) நாவுக்கரசர் தில்லைக்காட்சி

திருநாவுக்கரசர்தம் கைகளானவை தலையின்மேல் அஞ்சலித்துக் குவிந்தன. கண்கள் கண்ணீர் மழையை இடையறாது பொழியும் தன்மையனவாயின. மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய நான்கு காரணங்களும் புறக்காரணங்களுடன் கூடி உருகின. தரிசனப் பேற்றினை அடைந்த உடல் மண்ணிலே, விழுவதும் எழுவதுமாயிருந்தது. மின்னலைப் போன்று ஒளிவிடும் தாழ்ந்த சடையுடன் தில்லையம்பலத்திலே நின்று ஆடியருளும் நடராசப் பெருமானது திருநடனத்தினை எதிரிலே நின்று வணங்கும் அவரது உள்ள ஆர்வமானது பெருகுவதற்கு அளவேயில்லை.

(3) சுந்தரர் தில்லைக்காட்சி

சுந்தரரின் ஐம்பொறிகளாலும் பெறத்தக்க பெரிய அறிவையும் கண்களே பெற்றுக் காணலாகிய ஒன்றே விஞ்சிநின்றது. மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய அந்தக் காரணங்கள் நான்கும் மனம் ஒன்றிலேயே ஒன்றின. சாத்துவிகம், இராசசம், தாமதமாகிய முக்குணங்களிலும் சாத்துவிகமே மேலோங்கி நின்றது. இவ்வாறு, பிறைச் சந்திரன் வாழும் சடா முடியினரான நடராசப் பெருமான் ஆடியருளும் எல்லையில்லாததும் ஒப்பற்றதுமான பெரிய கூத்தினால் உண்டான பேரானந்த வெள்ளத்திலே மூழ்கி ஒரே தன்மையான மகிழ்ச்சியிலே உள்ளமாகிய தாமரை மலரப் பெற்றார் சுந்தரர்.

10 (அ) கந்தபுராணத்தை இயற்றியவர் காஞ்சிக் குமரகோட்டத்துச் சிவாசாரியாரான கச்சியப்பர். சிவபுராணங்கள் பத்தினுள்ளும் தலை சிறந்தது கந்தபுராணம். கந்தபுராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்திலும் இல்லை, என்ற பழமொழி இதன் பெருமைக்குச் சான்றாகும். புராணமாயினும் காவியம்போல எல்லாச்சுவைகளும் பொருந்துமாறு மிக விரிவாக ஆக்கப்பட்டது கந்தபுராணம். கலியுகவரதரான கந்தசுவாமியின் அவதாரமும், அவர் சூரபன்மனதியரை அழித்துத் தேவர்க்கு அருளியதும், வள்ளி, தெய்வானை அம்மைகளைத் திருமணம் செய்ததும் கந்தபுராணத்தில், பத்திச்சுவை சொட்டுமாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளன. சைவசித்தாந்த நுண்பொருள்களின் கருவூலமாகவும், இப்புராணம் விளங்குகின்றது. ஆலயங்களிலும் மடங்களிலும் கந்தபுராணத்தினை ஓதிப் பொருள் கூறும் புராணபடன மரபு யாழ்ப்பாணத்திற்கே உரிய மரபெனலாம். கந்தபுராணத்தினை யாழ்ப்பாண மக்கள் போற்றிப் படித்து அதன்வழி ஒழுகிவருகின்றனர். இதனால் 'யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம்' எனப் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை போற்றியதும் குறிப்பிடத்தக்கது.

(ஆ) (1) கந்தபுராணத்துக்குப் பின்னர், அருணகிரிநாதர் முருகப்பெருமான்மீது பாடியருளிய திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருவகுப்பு, கந்தரந்தாதி என்பன எழுந்தன. இவை முருகப்பெருமானின் அளவிலாப் பெருமைகளையும் அவர்மீது பத்திசெய்ய வேண்டிய அவசியத்தையும் சிறப்பாக எடுத்துக் காட்டுவன. இவற்றுள்ளே இசையமைதியும் சந்தச்சிறப்பும் மிகுதியும் அமைந்த திருப்புகழ் தலைசிறந்தது. முருகனடியார்கள் திருப்புகழ் கந்தரலங்காரம், கந்தரநுபூதி என்பவற்றைப் பத்தி சிரத்தையோடு பாராயணம் செய்து வருகின்றனர்.

(2) கலைகளின் தெய்வமாக விளங்குபவள் சரஸ்வதி, நான்முகனின் நாவில் அமர்ந்து தன்னை வழிபடுவோர்க்குக் கல்விச் செல்வத்தையும் கலைச்செல்வத்தையும் வாரிவழங்குபவள், கலைச்செல்வி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், கந்தர், கலிவெண்பா, மதுரைக்கலம்பகம், முத்துக்குமாரசுவாமிபிள்ளைத் தமிழ் முதலியபிரபந்தங்களைப் பாடிய குமரகுருபர சுவாமிகள் சகலகலாவல்லி மாலை என்ற சரசுவதி தோத்திரத்தினையும் பாடியுள்ளார். டெல்லியில் மடம் அமைக்க நிலம் வேண்டி இஸ்லாமிய அரசருடன் உரையாட விரும்பிய சுவாமிகள் இந்தி மொழியைத் தெரிந்து கொள்ளக் கலைமகளை வேண்டிச் சகலகலாவல்லி மாலையைப் பாடி அவ்வாறே இந்திமொழியை அறிந்து கொண்டார் என்பர். நவராத்திரி காலங்களிலே சைவப்பாடசாலைகளிலே சகலகலாவல்லிமாலையை ஓதிக் கலைமகளின் அருளை வேண்டுவது வழக்கமாயுள்ளது.

(3) அரசருக்கு அமாவசையன்று அது பௌர்ணமிநாள் என்று கூறிய சத்தி உபாசகரான அபிராமிப்பட்டர் தாம் கூறியதை நிலைநிறுத்துமாறு வேண்டி அபிராமியன்னையைப் போற்றிப் பாடினர். அம்மை தன் காதுத்தோடுகளில் ஒன்றை வானில் வீசி அமாவாசை இருளினைப் போக்கிப் பௌர்ணமியாக ஒளிவிடச் செய்தருளினள். 'அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்' என்பதற்கு அபிராமிப்பட்டரின் வேண்டுதலும் பெற்ற பயனுமே சான்றுகள். அபிராமியந்தாதி உலகத்தின் தாயாகிய அன்னை பராசத்தியின் அருட் பெருமைகளை விரித்துரைக்கும் சிறந்த பத்திப்பிரபந்தம்.

(4) மௌனகுருவின் சீடராய் அமர்ந்து சமரசசன்மார்க்க நெறிக்கு வழி வகுத்த தாயுமானசுவாமிகள் சிறந்தஞானி; சோழ நாட்டிலே திருமறைக் காட்டிலே அவதரித்தவர். ஆயிரத்துக்கு மேற்பட்ட திருப்பாடல்களைச் சிவன்மீதும் அம்மைமீதும் பாடியருளியவர். அவற்றுள் ஒன்றே 'பராபரக் கண்ணி', எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதல்லால் வேறொன்றறியாத' இப்பெரியார் பராபரக் கண்ணியிலே சைவசித்தாந்த உண்மைகளைப் பொதிந்து வைத்துள்ளார்.

12. (அ) திருமூலர் யாத்தருளிய திருமந்திரம் மூவாயிரம் திருப்பாடல்களைக் கொண்டது. இம் மூவாயிரம் பாடல்களும் ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பட்டுள்ளன. வடமொழியிலுள்ள ஒன்பது ஆகமங்களின் சாரத்தைத் (ஒவ்வொரு ஆகமசாரமும் ஒவ்வொரு தந்திரமாக வகுக்கப் பட்டுள்ளது) திருமந்திரம் உள்ளடக்கியுள்ளது. முதல் தந்திரம் ஒழுக்க நெறியை வகுத்துக்கூறும். இரண்டாம் தந்திரத்தில் புராணசாரம், ஐந்தொழில் விளக்கம் என்பன அடங்கியுள்ளன. மூன்றுவது தந்திரத்தில் யோகசாதனைபற்றிய விளக்கம் உண்டு. நாலாந் தந்திரம் யந்திரம், மந்திரம் பற்றிய செய்திகளைக் கொண்டது. ஐந்தாம் தந்திரத்தில் சைவத்தின் பல பிரிவுகள், நால்வகைப் பாதங்கள், முத்திநிலைகள் பற்றி விளக்கப்படும், ஆறும் தந்திரத்தில் குருதரிசனம், திருவடிப்பேறு, திருநீற்று மகிமை, தவம், துறவு பற்றிய செய்திகள் உள்ளன. ஏழாம் தந்திரத்தில் இலிங்க வகைகள், உடலின் ஆறு ஆதாரங்கள், மாகேசுரபூசை, சமாதிமுறை, குருபூசை பற்றிக் கூறப்படும். எட்டாந் தந்திரத்தில் முப்பொருள் விளக்கம் முதலாகிய சைவசித்தாந்த உண்மைகள் மிக விரிவாகக் கூறப்படும். ஒன்பதாந் தந்திரம் பஞ்சாட்சர விளக்கம், திருக்கூட்டத்துத் தரிசனம், ஞானத்தோற்றம் முதலாகிய தத்துவ விடயங்களும், சீவன் முத்தர் இயல்பும் விரித்துரைக்கும்.

(ஆ) (1) சரியாபாதம்

பிராயச்சித்தம் செய்தற்கான விதிமுறைகள், பவித்திர விதி, சிவலிங்க இலக்கணம், சிவபெருமானின் திருமேனிகளது இலக்கணம், செபமாலை, யோகபட்டம், துண்டம், கமண்டலம் என்பவற்றின் இலக்கணம், அந்தியேட்டி, சிராத்த விதிகள் இப்பகுதியில் கூறப்படும்.

2) கிரியாபாதம்

மந்திரங்களை உச்சரிக்கும் விதி, சந்தியாவந்தனம் செய்யும் முறை, செபம், ஓமம், சமயதீட்சை, விசேட தீட்சை, நிருவாண தீட்சை, ஆசாரியாபிடேகம், சிவசின்னங்கள் அணியும் விதிகள், சிவப்பிரசாதம் உண்ணல் என்பன விளக்கப்படும்.

(3) யோகபாதம்: முப்பத்தாறு தத்துவங்கள், தத்துவ ஈசுவரர்கள், ஆன்மா, பரமசிவன் சத்தி, உலகத்தோற்றக் காரணமாகிய மாயை, மகாமாயை என்பவற்றின் விளக்கம், அட்டமா சித்திகள், அட்டாங்கயோகங்கள் அவற்றின் இயல்புகள், உடலின் ஆறு ஆதாரங்களின் முறைமைகள் இப்பாதத்தில் கூறப்படும்.

(4) ஞானபாதம்: பரமசிவனுடைய சொரூபம், ஆன்மாக்கள் மூவகைகளின் (சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்) சொரூபம், மும்மலங்களின் சொரூபம், சத்தியின் சொரூபம், முப்பத்தாறு தத்துவங்களின் தோற்றம்' இவை ஆன்மாக்களின் அநுபவங்களுக்குக் கருவியாகும் முறை, உலகங்கள் அவற்றின் கடவுளரின் சொரூபம், [உலக அழிவாகிய பிரளயத்தின் சொரூபம்] பிரளயத்தின்பின் செய்யப்படும் ஐந்தொழில்களின் முறைமை, பாசுபதம் மகாவிரதம், காபாலமாகிய சைவத்தின் மதப்பிரிவுகளின் சொரூபம் என்பன இப்பாதத்தில் விளக்கப்படும்.

13. (அ) ஆகமம், இறைவனால் எமக்கு வழங்கப்பட்ட உடம்பினைப் பாதுகாத்தலை வற்புறுத்துகின்றது. சுவர் இருந்தாற்றான் சித்திரம் எழுதலாம். அதுபோல உடல் இருந்தாற்றான் உயிரை வளர்க்கலாம், உயிரை ஓம்புவதே உடலை வளர்க்கும் முதன்மையான நோக்கம். உயிர் முன்னேற அன்பு அவசியம். எல்லாரும் யோகிகளாதல் இயலாது. ஆனால், இறைவன் மீது அன்பு பூணுதல் எல்லார்க்கும் எளிது. எனவே, இறைபத்தி மிகவும் அவசியமாகும். இறைவனை வணங்க அமைத்தவை கோயில்கள். நாம் கோயில் வழிபாட்டில் மூழ்ந்து நிற்றல் வேண்டும். ஆலயங்களை அமைப்பதும் சிறப்பாக நிருவகித்தலும் சிறந்த சிவ புண்ணியம். இதற்கு ஆலய அமைப்புப் பற்றியும் அறிதல் வேண்டும். ஆன்மாக்கள் மல மாயை உடையவை. கடவுள் நிர்மலர். மலமாயை நீங்க இறைவனின் துணை அவசியம் இறைவனருளால் ஞானம் கிட்டும். பாசம் அறும். பாசம் அற இறைவனுடன் இரண்டற, கலக்கும் முத்தியின்பம் கைவரும்.

(ஆ) வேதம் ஆரியரது சமயநம்பிக்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டது ஆகமம் திராவிடரது சமயநம்பிக்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டது, வேத வழிபாட்டில் வேள்விக்கே முதலிடம் வழங்கப்படும். ஆகம வழிபாடு திருவுருவங்களுக்குப் பூக்கள் கொண்டு செய்யப்படும் பூசை, தீபதூப ஆராதனை, நைவேத்தியம், அருச்சனை, அபிடேகம் என்பவற்றிற்கு முதலிடம் வழங்குவது, வேதவேள்வியிலே ஓமகுண்டத்தில் தீவளர்க்கப்பட்டுக் குறித்த தெய்வத்துக்கு அவிர்ப்பாகம் வழங்கப்படும். அதனை அக்கினி கொண்டு சென்று குறித்த தெய்வத்திற்கு வழங்கி வேள்வி செய்தோர்க்கான விருப்பங்களை நிறைவேற்றி வைக்கும் என்பது ஆரியரின் நம்பிக்கை. வேத வழக்குச் சாதியாசாரத்தை அடிப்படையாகக் கொண்டது. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற வருணப்பாகுபாடும் சண்டாளர், புலையர் முதலான உபவருணப் பாகுபாடும் மக்களைப் பிரித்து வைக்க ஆரியர் கையாண்ட வழிமுறைகள். சூத்திரர், உபவருணத்தவர் வேள்வி செய்யவோ வேதத்தைக் கற்கவோ அநுமதி வழங்கப்படவில்லை. திராவிடர் சாதிப்பாகுபாடோ, வருணப்பாகுபாடோ கொண்டவரல்லர். எவரும் சமய ஒழுக்கத்தைப் பேணி நடந்தால் அவர்கள் தீட்சைபெறவும் சமயவழிபாடுகளை நிகழ்த்தவும் தகுதிபெற்றவர்களாகத் திராவிடரால் கொள்ளப்பட்டனர் காலப்போக்கில் வேத, ஆகம நாகரிகங்கள் கலந்து வேறுபாடின்றி இன்று கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆரியரின் சமய தத்துவம் வேதாந்தம். அது உபநிடதக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது. திராவிடரின் சமயதத்துவமாகிய சைவசித்தாந்தம் வேதத்தை-உபநிடதத்தை-ஏற்றாலும் ஆகம நெறியிலேயே வளர்ந்தது. வேதாந்த மகாவாக்கியமாகிய தத்துவமசி சித்தாந்தத்தில் தெளிவு பெறுகின்றது. இதன் காரணமாக 'வேதாந்தத் தெளிவே சைவசித்தாந்தம்' என்பர்.

14. (அ) மனிதரின் மனம் ஒருமுகப்படத் தியானம் அவசியம். தியானத்திற்கு உபகாரமாவது மந்திரம். மந்திரம் என்பதற்குத் தெய்வத்தை அழைப்பது என்பது பொருள். 'நினைப்பவரைக் காப்பது' என்றும் இதற்குப் பெரியோர் பொருள் கொள்வர். இத்தகைய மந்திரங்கள்

தவத்தாலே மனம் சுத்தமான அருளுடைய பெரியோர்களது வாக்குக்களாகும்; இவர்களது மந்திரங்களுக்கு மிகுந்த சத்தி உண்டு. மந்திரத்தை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதால் இறைவன் எம் உள்ளத்தில் நிலையாகக் குடிகொள்வான். எனவே மந்திரங்களை உச்சரித்துத் தியானம் செய்ய ஒவ்வொருவரும் தகுதி பெறல் வேண்டும். இந்தத் தகுதியைத் தருவதே சிவதீட்சை. தீக்ஷா என்னும் சொல்லின் பொருள் ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது என்பதாகும்: எனவே நாம் எமது ஆணவம் ஆகிய அறியாமையைப் போக்கி ஞானத்தையடையத் தீட்சை பெறுதல் அவசியம்.

(ஆ) தீட்சை சாதாரதீட்சை என்றும் நிராதாரதீட்சை என்றும் இரு வகைப்படும். (ஸ + ஆதார = ஆதாரம் உடையது, நிர் + ஆதார = ஆதாரமற்றது) விஞ்ஞானகலர், பிரளயாகலர் ஆகிய ஆன்மாக்களுக்கு முறையே அறிவு வடிவாயும் நீலகண்டம், முக்கண், நாற்புயமாகிய உறுப்புகளுடன் கூடிய வடிவாயும் தோன்றிக் குருவாய் தீட்சை புரிவது நிராதார தீட்சையாகும். இதனல் விஞ்ஞானகலரின் ஆணவமலம் வலி ஒடுங்கும். பிரளயாகலரின் கன்மம், மாயை நீங்கும். சகலராகிய மும்மலமுடையவர்க்கும் மானிடக் குருவால் வழங்கப்படுவதே சாதார தீட்சை.

சாதாரதீட்சையின் வகைகளும் தன்மைகளும் பின்வருவன:

(1) மானசதீட்சை:- குரு யோக சித்தியால் சீடனது உள்ளத்துட் புகுந்து உள்ளத்தைச் சுத்திகரிக்கும் தீட்சை

(2) யோகதீட்சை:- நிராதார தீட்சைக்குச் சீடனைப் பக்குவப்படுத்தும் தீட்சை

(3) ஔத்திரிதீட்சை:- ஓமம் வளர்த்துக் குருவால் அதன்முன்பு வழங்கப்படும் மந்திரோபதேசம்: இது ஞானவதி, கிரியாவதி என இருவகைப்படும்.

1. ஞானவதி: மனத்தால் யாககுண்டம் அமைப்பதாகக் கற்பனை செய்து வழங்கும் தீட்சை.

2. கிரியாவதி:- யாககுண்டம் அமைத்து வழங்கும் தீட்சை.

ஔத்திரி தீட்சையைச் சபீசதீட்சை (மந்திரத்தோடு பீசாட்சரமும் கொண்டது), நிர்ப்பீச தீட்சை (மந்திரத்தோடு மட்டும் கூடியது) எனவும் பிரிப்பதுண்டு.

சைவமக்கள் தமது சமயாசாரங்களை அநுட்டிக்க வழங்கப்படும் தீட்சைகளும் உள்ளன: அவை சமயதீட்சை, விசேடதீட்சை, நிர்வாணதீட்சை, ஆசாரியாபிஷேகம் என நான்கு வகைப்படும்.

(1) சமயதீட்சை: சமயாசாரத்தை அநுட்டிக்கும்படி முதலில் வழங்கப்படும் தீட்சை.

(2) விசேடதீட்சை: ஆன்மார்த்த பூசையாகிய சிவலிங்க பூசையைச் செய்யும் தகுதிபெற வழங்கப்படுவது.

(3) நிர்வாணதீட்சை: மேற்குறித்த இரு தீட்சைகளாலும் சந்தியாவந்தனம், சிவலிங்கபூசை என்பன செய்யத் தகுதி பெற்றோர். உலகப்பற்றைத் துறந்து பெறுவது (உடன்முத்தி தரும் சத்தியோ நிர்வாணதீட்சை). வினைப்பயன் முடிய முயல்வதற்குப் பெறுவது (முன்வினைப் பயன் முடியும்வரை உடலுடன் இருந்து உடல் விழுந்ததும் முத்திக்குரியராகும் அசத்தியோ நிர்வாண தீட்சை) ஆகிய இருவகைத் தீட்சைகளை உள்ளடக்கியது நிர்வாண தீட்சையாகும்.

(4) ஆசாரியாபிஷேகம்: நிர்வாண தீட்சைபெற்றவர் குருவாகும் தகுதியை அடையப்பெறும் தீட்சை ஆசாரியாபிஷேகம் ஆகும்.

15. (அ) குரு என்ற சொல்லின் பொருள் அறியாமையைப் போக்குபவர் என்பதாகும். சிவாலயங்களிலே கருவறையின் தெற்குச் சுவரில் ஞானமுத்திரை காட்டியவண்ணம் அமர்ந்திருப்பவர் சிவபெருமான் கொண்ட குருமூர்த்தமாகிய தட்சிணாமூர்த்தியாவர். இதிலிருந்து குருவின் மகிமை நன்கு புலனாகும். சைவசமயத்தவர்கள் யாவருக்கும் குருமூர்த்தி சிவபெருமானே என்பதும் தட்சிணாமூர்த்தத்தால் நாம் அறிந்து கொள்ளத்தக்கதாகும் பக்குவமடைந்த ஆன்மாக்களுக்குச் சிவபெருமானே குருவாக எழுந்தருளி அருள்பாலிப்பார் என்பதற்கு, மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையிலே குருவுபதேசம் பெற்றமை சான்றாகும். எவரின் முன்னிலையில் ஒருவருக்கு மன அமைதியும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

ஆகிய காரணங்களதும், மெய், வாய், கண், மூக்கு, 'செவியாகிய கருவிகளதும் ஒடுக்கம் உண்டாகின்றதோ, ஆனந்தக் கண்ணீர் பெருகுகின்றதோ அவரே ஞானகுரு என்று கொள்ளத்தக்கவராவார்.

(ஆ) ஆசிரியர்கள் 'ஆசு' என்னும் அறியாமையாகிய குற்றத்தைப் போக்குபவர்கள்: உலகியல் வாழ்விற்கான கல்வியையும் ஒழுக்கநெறியையும் உணர்த்துபவர்களே ஆசிரியர்களாவர். ஞானகுருவோ ஒருவரின் முன்வினைப் புண்ணியப் பயனாய் வந்து உலகியலின் தீமைகளையும் ஆணவம் முதலாகிய அறியாமை இருளையும் ஓட்டி ஞானத்தினை வழங்கி முத்திப் பேற்றுக்கு எம்மையும் வழிநடத்திச் செல்பவர்கள். எனவே ஞானகுரு, ஆசிரியரிலிருந்தும் வேறானவர் மட்டுமன்றி மேலானவருமாவார்.

16. (அ) சிவபெருமான் ஆன்மாக்களின் உள்ளங்களை இடமாகக் கொண்டு வழிபாட்டினை ஏற்கும்பொழுது அவ்வழிபாடு அகவழிபாடு ஆகும். புறத்தே சிவலிங்கம் முதலாகிய திருமேனிகளையும் குருவையும் அடியார்களையும் (சங்கமர்) இடமாகக் கொண்டு வழிபாட்டினை ஏற்கும் பொழுது அது புறவழிபாடு எனப்படும். கல், உலோகம் முதலானவற்றில் மனிதரால் ஆக்கி வழிபடப்படும் இறைவனின் திருமேனிகள் விக்கிரகங்கள் எனப்படும். இறைவன் எங்கும் நிறைந்திருந்தாலும் ஆன்மாக்களின் பொருட்டுக் கருணை கொண்டு எழுந்தருளும் திருமேனிகளே விக்கிரகங்கள், இவற்றுள்ளும் தலையாயது உருவமாகவும் அருவமாகவும் விளங்கும் சிவலிங்கத் திருமேனியாகும். சிவபெருமான் இலிங்கத்தில் எழுந்தருளியிருப்பவர் என்பதனை அப்பர் சுவாமிகள், வடதளியில் உண்ணாவிரதமிருந்து சிவபெருமான் அருளால் சமணரின் மறைப்பிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட இலிங்கத்தினை வழிபட்டமை எமக்கும் எடுத்துக் காட்டுவதாகும்.

(ஆ) சங்கமம் என்ற சொல் சிவனடியார் கூட்டத்தினைக் குறிக்கும். பெரிய புராணத்தில் 'திருக்கூட்டச் சிறப்பு' என்ற பகுதியில் சிவனடியாரின் பெருமைகள் விரித்துக் கூறப்படும். சிவனடியார்களின் ஆபரணம் உருத்திராக்க மாலையாகும். அவர்கள் தமது உடலிலே தரித்திருக்கும் திருநீறு போலவே உள்ளத்தாலும் புனிதர்கள். இவர்கள் ஞான ஒளியைப் பரப்பி அறியாமை இருளைப் போக்கும் வல்லமை பொருந்தியவர்கள். தமது உள்ளத்து அன்பு காரணமாகச் சிவபெருமானை வணங்குவதல்லாது மோட்சத்தையும் விரும்பாத பெருமை இவர்கட்கு உண்டு. ஐம்பூதங்கள் தமது நிலையில் தவறிய பொழுதும் அடியார்கள் தமது நிலையிலிருந்து தவறார். சிவசிந்தனை ஒன்றிலேயே ஈடுபட்டு மனஉறுதியிலேயே மலைபோலக் கலங்காதிருக்கும் தன்மையர் இவர்கள். நின்றாலும் கிடந்தாலும் உண்டாலும் உறங்கினாலும் இருந்தாலும் நடந்தாலும் எப்பொழுதும் சிவசிந்தனை மறவாதவர்கள் இவர்கள். சிவவேடமே இவர்களின் தவவேடம். சுந்தரரும் சிவனடியாரும் உறங்கிய மடத்திலே சிவபெருமானும் அடியார் வேடத்தில் வந்து உறங்கினாரென்றால் சிவனடியாரின் பெருமை சொல்லும் தகையதோ? சிவபெருமான் வேறு, சிவனடியார் வேறு என்று நினைப்பது அறியாமை. திருத்தொண்டர் பெரியபுராணத்திலே சுந்தரரையே 'புறகு' சொன்ன விறன்மிண்ட நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரைத் தெய்வமாகப் போற்றிய அப்பூதியடிகளும் அடியார் வழிபாட்டின் பெருமையை நமக்கு நன்கு உணர்த்தியுள்ளனர். அப்பர் சுவாமிகள் தம்மிலும் வயதால் மிகுதியும் குறைந்த பாலகரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது பல்லக்கைச் சுமந்து அடியார் பெருமையை எமக்கு அறிவுறுத்தியுள்ளார். எனவே சிவனடியாரையும் அவர்கள்தம் சிவவேடத்தையும் சிவனாகவே பாவனை செய்து வழிபடல் சைவர்களாகிய எமது நீங்காக் கடனாகும்.

உன்னடியார் தாள் பணிவோம்

— மாணிக்கவாசகசுவாமிகள்.

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே

— மெய்கண்டார்

17. (அ) சிவாலயங்களிலே மூலத்தானம் என்னும் கருவறையிலே சிவலிங்கம் எழுந்தருளியிருக்கும் பக்கத்தில் உமையம்மைக்கும் கோயில் அமைக்கப்பட்டிருக்கும். இவர்களின் மூர்த்தி பேதங்களைக் குறிக்கும் விக்கிரகங்கள் கோயிலின் உள் வீதியிலே சிறிய கோயில்களில் எழுந்தருளியிருக்கும். மூர்த்தி பேதங்கள் என்னும்போது நடராசர், தட்சிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் முதலிய பேதங்களும் அவ்வவற்றிற்கான சத்தி பேதங்களும்

மட்டுமன்றிச் சிவபெருமானின் திருக்குமாரர்களாகக் கொள்ளப்படும் விநாயகர், வைரவர், சுப்பிரமணியர் ஆகியோரும் அடங்குவர். நாயன்மார் அறுபத்து மூவர்க்கும் சிவாலயங்களில் இடம் ஒதுக்கப்படுதலும் உண்டு. நவக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்ட கோயில்களும் உள்ளன.

(ஆ) திருவிழாக்கள் மகோற்சவங்கள் என்ற பெயராலும் அழைக்கப்படும். நாள்தோறும் நடைபெறும் பூசைகளில் ஏற்படும் குறைகுற்றங்களைப் போக்குவதற்காகத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இறைவன் ஆன்மாக்களுக்காகச் செய்தருளும் ஐந்தொழில்களையும் குறிப்பனவாகவும் திருவிழா கொள்ளப்படுகிறது. படைத்தல் தொழிலைக் குறிப்பது கொடியேற்றம். காத்தல் தொழிலைக் குறிப்பன வாகனத் திருவிழாக்கள். அழித்தல் தொழிலைக் குறிப்பது தேர்த்திருவிழா, மறைத்தல் தொழிலைக் குறிப்பது மௌனோற்சவம், அருளைக் குறிப்பது தீர்த்தத் திருவிழா.

18. (அ) உபவாசம் என்பது இறைவனுக்கு மிகவும் நெருக்கமாக இருந்து புலன்களை ஒருமுகமாக்கி அவரை வழிபடல் என்பதே பொருள். அன்றைய தினம் முழுவதும் இறைவனின் சிந்தனையிலே கழிப்பது என்பதும் உபவாசம் என்பதன் மற்றொரு பொருளாகும்.

(ஆ) 1. விநாயகர் விரதம், ஆவணிச் சதுர்த்தி: இது ஆவணி மாதத்துச் சுக்கில பட்சத்துச் சதுர்த்தியன்று. நோன்பிருந்து விநாயகருக்கு அறுகம் புல்லினாலே பூசை செய்வதாகிய விரதம், கார்த்திகை மாதத்துக் கிருஷ்ண பட்சத்துப் பிரதமையிலே தொடங்கி மார்கழி மாதத்துச் சுக்கில பட்சத்துச் சட்டிவரை இருபத்தேழு நாள்கள் அநுட்டிக்கப்படும் விரதம் விநாயகசட்டி என அழைக்கப்படும்.

(2) கந்த விரதம்: ஐப்பசி மாதத்துச் சுக்கில பட்சத்துப் பிரதமை தொடக்கம் சட்டி வரையுள்ள ஆறுநாள்கள் பூரண உபவாசமிருந்தோ, ஒரு நாளைக்கு ஒருமுறை உணவுண்டோ அநுட்டிக்கப்படும் விரதம் கந்தசட்டி. முருகன் சூரபன்மனைச் சங்கரித்துப் பின் சேவலும் மயிலுமாய் ஆட்கொண்டருளியமையைக் குறிக்கும் விரதமாகும்.

(3) சத்தி விரதம்: புரட்டாதி மாதத்துச் சுக்கிலபட்சத்துப் பிரதமை தொடக்கம் ஒன்பது இரவுகள் அநுட்டிக்கும் நவராத்திரி விரதம் சத்திக்குரியது. ஒன்பது இரவுகளும் சத்தியை முறையே துர்க்கை, இலக்குமி, சரசுவதி என்னும் மூன்று சத்திகளாய் வகுத்து, ஒவ்வொருவர்க்கும் மூன்று மூன்று நாள்கள் வழிபாட்டிற்கு உரியனவாக்கி நோன்பு இருந்து அநுட்டிக்கப்படுவதே நவராத்திரி விரதமாகும். பத்தாவது நாளை விஜயதசமித் திருநாளாகக் கொண்டு கோயில்களிற் பெருவிழா எடுப்பது வழக்கம். இந்நாள் துர்க்கை, மகிடாசுரனை வதை செய்து தேவர்க்கும் மனிதருக்கும் மகிழ்வளித்த நாளாகக் கொள்ளப்படுகின்றது.

19. (அ) பிரதோஷ விரதம்: சுக்கில பட்சம், கிருஷ்ண பட்சம் (வளர்பிறை பதினைந்து நாள் தேய்பிறை பதினைந்து நாள்) ஆகிய இரண்டினதும் பதின்மூன்றும் நாளான திரயோதசியன்று சூரியன் மறைவதற்கு மூன்றே முக்கால் நாழிகையின் முன்னுள்ள ($24 \times 3\frac{3}{4} = 90$ நிமிடம்) பிரதோஷ காலத்தில் சிவபெருமானை நோக்கி அநுட்டிக்கப்படுவது. இத்தினத்தில் மாலைவரை உண்ணாமலிருந்து சூரியன் மறைவதற்கு ஒன்றரை மணித்தியாலத்தின் முன் நீராடிச் சிவபூசை பண்ணுவோர் சிவபூசை பண்ணல் வேண்டும். பின்பு சிவாலயம் சென்று சிவபெருமானை முறைப்படி தரிசனம் பண்ணி வரல்வேண்டும். அதன் பின்னர் சிவனடியாரோடு சேர்ந்திருந்து போசனம் பண்ணல் வேண்டும்.

(ஆ) சிவராத்திரி: மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசி (பதினான்காம் நாள்) தினத்தன்று உபவாசமிருந்து நான்கு யாமமும் சிவபூசை செய்தலும், இரவு பதினான்கு நாழிகைக்குப் பின்வரும் லிங்கோற்பவ காலத்தில் சிவாலய தரிசனம் செய்தலும், இரவு முழுதும் விழித்திருத்தலும் சிவராத்திரி விரதத்தினை அநுட்டிக்கும் முறைமைகளாகும். சிவராத்திரி இரவிலே சிவபுராணம் ஓதுவதும் பஞ்சாட்சரசெபம் செய்வதும் தக்கன. உலகமுடிவாகிய ஊழிக்காலத்திலே உலக உயிர்களும் பிரமனும் இறுதியுற்ற வேளையிலே உமாதேவியார் இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்து மீளவும் உலகையும் உயிர்களையும் தோன்றச் செய்தமையைக் குறிக்கும் புனித தினமே சிவராத்திரியாகும்.

20. (அ) தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி என்பன பண்டிகைகளாகும். தைமாதப் பிறப்பன்று சூரியனுக்குப் பொங்கல் பொங்கிப் படைத்து வழிபடுவது தைப்பொங்கல் எனப்படும், எமக்கு வேண்டிய உணவினைப் படைத்தற்குப் பேருதவி புரிவோனும், வேதகாலத்திலிருந்து வழிபடப்பட்டு வருபவனுமான சூரியனுக்கு ஆண்டு முழுவதும் அவன் செய்த உதவிகளுக்காய் நன்றி பாராட்டும் வகையிலே பொங்கிப் படைத்து வழிபடுவது நிகழ்ந்து வருகின்றது. சித்திரை வருடப்பிறப்பு இளவேனிற்காலத்து முதல் மாதமாகிய சித்திரை மாத முதல் நாள் கொண்டாடப்படுவதாகும். அன்று சைவ மக்கள் யாவரும் மருத்து நீர் வைத்து முழுகித் தெய்வ வழிபாடு செய்து கை விசேடம் பரிமாறி, உற்றாரோடு உறவாடி வருடப்பிறப்பினைக் கொண்டாடுவர். தீபாவளி ஐப்பசி மாதத்துக் கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசியன்று எண்ணெய் ஸ்நானம் செய்து புத்தாடை தரித்துக் கோயில் வழிபாடு செய்து உற்றாரோடு உறவாடி இந்துக்களாலே கொண்டாடப்படும் ஒரு பண்டிகையாகும்.

(ஆ) ஒரு காலத்தில் நரகாசுரன் என்ற அரசன் ஒருவன் வாழ்ந்தான். அவன் மிகவும் கொடியவன்; 'நான்' என்னும் அகந்தை மிக்கவன், அவன் தேவர்களை அடக்கி அவர்களுக்கு மிகுந்த கொடுமைகளைப் புரிந்து வந்தான். ஆலயங்கள் வீடுகள் யாவும் அவன் கட்டளையாலே இருளில் மூழ்கிக் கிடந்தன. பண்டிகைகள் கொண்டாடுவதையும் கோயில் வழிபாட்டையும் அவன் தடை செய்ததால் எங்கும் கவலை சூழ்ந்திருந்தது. இந்நிலையில் தேவர்கள் தம் துயரத்தினைப் போக்குமாறு திருமாலிடம் சென்று குறையிரந்தனர். திருமால் தேவர்களின் வேண்டுகோளினை ஏற்று நரகாசுரனோடு போரிட்டு அவனைச் சங்காரம் செய்தார். இறக்கும் வேளையிலே நரகாசுரனுக்கு நல்ல புத்தி வந்தது. அவன் திருமாலை வணங்கி ''எம்பெருமானே; என் காரணமாக இருள் சூழ்ந்திருந்த இவ்வுலகம் நான் இறக்கும் இந்நாளிலே ஒளிமயமாக விளங்கல் வேண்டும். எனது மரணத்தினைச் சகலரும் எண்ணெய் முழுக்காடிப் புத்தாடை தரித்து இறைவழிபாடு செய்து கொண்டாடல் வேண்டும். தேவரீர் எனக்கு இவ்வரத்தை அருளும்'' என்று வேண்டினான். அன்றிலிருந்து தீபாவளி கொண்டாடப்பட்டு வருகின்றது. தீப + ஆவளி = தீபத்தின் வரிசை என்பது பொருள்.

21. (அ) 'உணவெனப்படுவது நிலத்தொடு நீரே' என்பது பழந்தமிழ்ப் புலவர் ஒருவரின் வாக்கு. உணவுக்கான பயிர்கள் வளர்வதற்குச் சூரிய வெப்பமும் நீரும் அவசியமானவை. சூரியனின் கதிரொளியே நீர் நிலைகளிலுள்ள தண்ணீரினை ஆவியாக்கி மேலெழச் செய்து பின் மழையாகப் பெய்ய வைக்கின்றது. எனவே, உலகவாழ்க்கைக்குச் சூரியனின் ஒளி மிகவும் வேண்டப்படுகிறது. சூரியன் இல்லையேல் உலகில் எந்த உயிரும் வாழமுடியாது அழிந்து போகும். எனவே எமது வாழ்க்கைக்கு உயிர்நாடியாயுள்ள சூரியனுக்கு எம் நன்றிக் கடனைச் செலுத்தும் வகையிலே பொங்கல் பொங்கிப் படைத்து வழிபடுகின்றோம். பொங்கல் தை மாதம் முதலாந் திகதியோடு முடிந்துவிடுவதில்லை. உணவுப்பயிர்ச் செய்கையிலே உறுதுணையாய் இருக்கும் பசு மந்தைக்கு நன்றி செலுத்துமுகமாகப் பொங்கலுக்கு அடுத்த நாள் அவற்றிற்குப் பட்டிப்பொங்கல் நிகழ்கிறது.

(ஆ) தைப்பொங்கலன்று சூரியன் உதிக்க முன்னரே எழுந்திருந்து முற்றத்தைச் சுத்தம் செய்து கோலமிட்டுத் தோரணம் நாட்டிப் பொங்கலுக்கென்று வைத்த அடுப்பிற்கும் பொங்கற் பாத்திரத்திற்கும் விபூதி தரித்துப் பொட்டிட்டு இல்லத்தலைவர் அதனை அடுப்பில் ஏற்றுவார். பின்பு நீர் கொதிக்கையில் சூரியனை வழிபட்டுப் பாத்திரத்தில் கொதிக்கும் உலை நீரிலே அரிசி இடப்படும். பொங்கல் பொங்கியதும் தலைவாழையிட்டுப் பொங்கலைப் படைப்பதோடு பலாப்பழம், கரும்பு, இளநீர், மஞ்சள், பயறு ஆகியனவும் படைத்துச் சூரியனை வழிபடுவர். இப்பொங்கல் விழாவன்று பொங்கல் பொங்குவது போலவே மக்களின் மனங்களும் மகிழ்ச்சியாற் பொங்கிய வண்ணமே இருக்கும். பொங்கல் விழாக்களை இல்லங்களின் மட்டுமல்லாது, சமூக நிறுவனங்களிலும் இன்று பலவேறு கலைவிழாக்கள் இணையுமாறு சிறப்பாகக் கொண்டாடும் வழக்கம் இருந்து வருகிறது.

# பத்தாம் ஆண்டு

# மாதிரி வினாத்தாள்

பகுதி - ஒன்று நேரம்: 45 நிமிடம்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் அவற்றின் கீழ்த் தரப்பட்டுள்ளன. இவற்றுள்ளே மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் எதிரிலுள்ள அடைப்புக் கோட்டினுள் × என்ற புள்ளியிடுக.

1. சிந்துவெளியில் பரந்து கிடந்த அரசினை நிறுவியவர்கள் எனக் கொள்ளப்படுவோர்,

   1) ஆரியர் ( ) 3) திராவிடர் ( )
   2) இந்து ஐரோப்பியர் ( ) 4) மத்திய ஆசியர் ( )

2. இளமைக்கும் போர் ஆற்றலுக்கும் பெயர் பெற்ற கடவுள்,

   1) சிவன் ( ) 3) வீரபத்திரர் ( )
   2) விநாயகர் ( ) 4) முருகன் ( )

3. வேதகாலம் எனப்படுவது,

   1) கி. மு. 1500 - 1000 ஆண்டுகளைக் கொண்டது ( )
   2) கி. மு. 1500 - 600 ஆண்டுகளைக் கொண்டது ( )
   3) கி. மு. 800 - 400 ஆண்டுகளைக் கொண்டது ( )
   4) கி. மு. 3000 - 2500 ஆண்டுகளைக் கொண்டது ( )

4. வேதத்திற்குச் சுருதி என்ற பெயர் அமையக் காரணம்,

   1) அது இறைவனால் அருளிச் செய்யப்பட்டது ( )
   2) பல காலப்பிரிவில் எழுதப்பட்டவற்றின் தொகுப்பு ( )
   3) எழுதாமற் செவி வழியாக வந்தது ( )
   4) பாட்டிலும் வசனத்திலும் அமைந்தது ( )

5. காயத்திரி மந்திரத்திற்கு அப்பெயர் அமைந்த காரணம்,

   1) அது காயத்திரி என்பவரால் ஆக்கப்பட்டது ( )
   2) காயத்திரி என்னும் யாப்பிலே எழுதப்பட்டது ( )
   3) சூரியனுக்குக் காயத்திரி என்பதும் ஒரு பெயர் ( )
   4) காயமாகிய உடலைப் புனிதம் செய்வது ( )

6. மாயம், மருந்து போன்றவற்றுக்கு முதன்மையளிப்பதும் மந்திரம், கட்டளை, துதி மூன்றும் அடங்கியதுமான வேதம்,

   1) இருக்குவேதம் ( ) 3) சாமவேதம் ( )
   2) யசுர்வேதம் ( ) 4) அதர்வவேதம் ( )

7. சீவான்மாவும், பரமான்மாவும் ஒன்றே என்ற கருத்தை மீட்டும் மீட்டும் வற்புறுத்துவன,

   1) பிராமணங்கள் ( ) 3) உபநிடதங்கள் ( )
   2) சங்கிதைகள் ( ) 4) ஆரணியகங்கள் ( )

8. சங்க காலத்தில் முல்லைநிலத் தெய்வமாகக் கொள்ளப்பட்டவன்,

   1) முருகன் ( ) 3) வருணன் ( )
   2) இந்திரன் ( ) 4) திருமால் ( )

9. 'பிறவாயாக்கைப் பெரியோன்' என்று சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படும் கடவுள்,

1) சிவன் ( ) 3) இந்திரன் ( )
2) வருணன் ( ) 4) மாயோன் ( )

10. அனல்வாதத்தின்போது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் தீயில் இட்ட பதிகத் தொடக்கம்,

1) 'வாழ்க அந்தணர்' ( ) 3) 'தளிர் இளவளரொளி' ( )
2) மந்திரமாவது நீறு' ( ) 4) 'செய்யனே திருவாலவாய்' ( )

11. 'பொன்னுர் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைத் திருநாவுக்கரசு நாயனுர் பாடியருளிய சந்தர்ப்பம்,

1) திருபெண்ணுகடத்தில் சூல, இடப இலச்சினைகளைத் தமக்கு இறைவன் இட்டருளுமாறு வேண்டியபொழுது (
2) திருஞானசம்பந்தரோடு கூடித் திருமறைக்காட்டுக் கோயிலின் திருக்கதவம் திறக்குமாறு வேண்டியபொழுது ( )
3) உடல் தேய்ந்து நகரவும் முடியாத நிலையில் அந்தணராய் வந்த சிவபெருமானைத் திருக்கைலாயக் காட்சியைக் காட்டியருளுமாறு வேண்டியபொழுது ( )
4) அப்பூதியடிகளின் மகனை மூத்த திருநாவுக்கரசினை உயிர்பிழைத்து எழுப்பித்தருமாறு வேண்டியபொழுது ( )

12. திருநாவுக்கரசுநாயனுர் 'எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனே' என்ற திருப்பதிகத்தைப் பாடிய நாளுக்குரிய நட்சத்திரம்,

1) ஆவணிமூலம் ( ) 3) சித்திரைச் சதயம் (
2) வைகாசி அனுஷம் ( ) 4) ஆனி மகம் ( )

13. திருத்தொண்டர் பெரியபுராணத்தின் கதாநாயகர்,

1) சுந்தரமூர்த்தி நாயனுர் ( ) 3) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் ( )
2) திருநாவுக்கரசு நாயனுர் ( ) 4) சேரமான்பெருமான் நாயனுர் ( )

14. 'பிழையுள பொறுத்திடுவர்' என்பது சுந்தரர் பாடியருளிய திருப்பதிகம் ஒன்றன் தொடக்கம். அவர் செய்த பிழை,

1) பரவையார் மனைக்குச் சிவபெருமானைத் தூதனுப்பியமை, ( )
2) சிவபெருமானுடன் வாதாடி வழக்கிட்டமை, ( )
3) பரவையார் மனைவியாராயிருக்கவும் சங்கிலியாரையும் மணந்து கொண்டமை ( )
4) சங்கிலியாருக்குக் கொடுத்த வாக்குறுதியைக் கைவிட்டுத் திருவாரூரிலே பங்குனிஉத்தரத் திருவிழாக்காணப் புறப்பட்டமை. ( )

15. மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் குருவாக எழுந்தருளி உபதேசித்த இடம்,

1) திருப்பெருந்துறை ( ) 3) திருவருட்டுறை ( )
2) திருவரவடுதுறை ( ) 4) திருவண்ணமலை ( )

16. சிவபெருமான் 'மண்சுமந்த பொன்மேனி' பெற்றமைக்கான காரணம்,

1) மாணிக்கவாசக சுவாமிகளுக்குப் பாண்டியன் வழங்கிய தண்டனைகளைத் தானே ஏற்றதால் ( )
2) அடியார்களின் அல்லல்களைத் தமக்குவரும் அல்லல்களாகக் கொண்டமையால் ( )
3) வந்திக்கு ஒதுக்கப்பட்ட பகுதியை அடைக்காது அரிமர்த்தன பாண்டியனுல் மொத்துண்டமையால் ( )

4) மாணிக்கவாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கிப் பாண்டியனை ஏமாற்றியமையால். ( )

17. 'அன்பே சிவம்' என்ற தத்துவம் விளக்கம் பெறும் திருமுறை,

1) எட்டாம் திருமுறை ( ) 3) ஏழாம் திருமுறை ( )
2) பத்தாம் திருமுறை ( ) 4) பன்னிரண்டாம் திருமுறை ( )

18. பதினோராம் திருமுறையில் அடங்கிய பிரபந்தங்களின் தொகை,

1) பதினொன்று ( ) 2) நாற்பது ( )
3) முப்பது ( ) 4) பன்னிரண்டு ( )

19. 'தாயினும் நல்ல தலைவர்' எனத் தொடங்கும் திருக்கோணமலைப் பதிகத்தில் 'நோயிலும் பிணியும் தொழிலர்' என வரும் தொடரின் பொருள்,

1) நோய் வந்த காலத்தும் பாசத்தில் நீங்காத அடியவர்கள் ( )
2) கவலையினத்தால் வரும் நோயின் பொழுதும் முன்வினைப்பயனால் வரும் பிணியின்போதும் அகலாத அடியவர்கள் ( )
3) நோய் உற்ற காலத்திலும் இறைவனையே பற்றி நிற்கும் அடியவர்கள் ( )
4) நோயிலும் பிணியிலும் தம் தொழில் விடாத அடியவர்கள் ( )

20. 'மலையான் மகள்' என்ற சொற்றொடர் குறிப்பது,

1) மலையில்லாத மகளை ( )
2) மலையரசன் மகளாகிய பார்வதியை ( )
3) மலைப்பில்லாதவன் மகளை ( )
4) மலையில் எழுந்தருளியவனின் மகளை. ( )

21. 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்ற திருத்தாண்டகத்தில் ஓசை என்பது குறிக்கும் பொருள்,

1) ஆகாயத்திலிருந்து தோன்றும் பலவகையான சொல் ( )
2) கருத்தற்ற ஒலி ( )
3) ஆகாயம் பிறப்பதற்கு மூலமான சப்த தன்மாத்திரை ( )
4) பிரணவமாகிய ஓங்கார ஒலி. ( )

22. திருவெம்பாவையில் எம்பிராட்டி சுரக்கும் இன்னருளுக்கு உவமையாகக் கூறப்பட்டது,

1) மேகம் 2) மழை 3) கடல் 4) ஆறு

23. சோளேச்சரத்தானின் உருவம் பற்றித் திருவிசைப்பாவிலே பின்வருமாறு கூறப்படுகின்றது,

1) கற்பனைக்கும் எட்டாதது ( ) 3) சூரியஒளிபோல ஒளிகாலும் திருமேனி ( )
2) ஆதியும் அந்தமும் அற்றது ( ) 4) விரும்புவார் விரும்பும் வடிவம் ( )

24. திருத்தொண்டர் பெரியபுராணத்தில் பாடப்பட்டுள்ள தொகையடியாரின் வகை,

1) 62 ( ) 2) 63 ( ) 3) 09 ( ) 4) 64 ( )

25. கந்தபுராணம் பாடப்பட்ட திருத்தலம்,

1) திருத்தணிகை ( ) 3) திருச்செந்தூர் ( )
2) பழனி ( ) 4) காஞ்சிபுரம் ( )

26. 'அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்' அடையக்கூடியதாகத் தாயுமானவர் கூறுவது,

1) மனஅமைதி தானே வந்து எய்தும் ( )

2) திருவருள் தானே வந்து எய்தும் ( )

3) இம்மை மறுமைக்கான இன்பநிலை தானே வந்து எய்தும் ( )

4) அடியார்களின் அருள்நோக்கம் தானே வந்து எய்தும் ( )

27. சைவம், வைணவம், சாக்தம் போன்ற சமயங்கள் தலையெடுத்த காலம்,

1) கி. மு. 1000 - 800 ( ) 3) கி. மு. 600 - 200 ( )

2) கி. மு. 800 - 600 ( ) 4) கி. மு. 1500 - 1300 ( )

28. ஆகமத்தின் பெருமையை மணிவாசகர் கூறும் வகை,

1) சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும் ( )

2) ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் ( )

3) நூலுணர் உணர நுண்ணியோன் ( )

4) குருபரன் ஆகி அருளிய பெருமை ( )

29. 'உம்மடியேன் உம்மடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்து எய்தப்பெற்று இங்குற்றேன்' இக்கூற்றின் சந்தர்ப்பம்,

1) அப்பர், திருஞானசம்பந்தரின் முத்துச்சிவிகையைத் தாங்கி வந்தது அறியாது சம்பந்தர் 'எங்குற்றூர் அப்பர்' என்று வினவியபொழுது அப்பர் உரைத்தது ( )

2) திருவையாற்றிலே அப்பருக்குச் சிவபெருமான் திருக்கயிலாயக் காட்சியைக் காட்டியருளியபோது அப்பர் கூறியது ( )

3) சம்பந்தர் மதுரையிலே சமண இருள்போக்கித் திரும்பிய காலத்தில் வழியிலே சந்தித்த அப்பர் கூறியது ( )

4) சுந்தரரின் சிரசிலே தம் திருவடியைச் சூட்டியவண்ணம் அந்தணர் கோலத்தில் சிவபெருமான் மடத்தில் படுத்திருந்த காலத்தில் சுந்தரர் கூறியது ( )

## பகுதி இரண்டு

நேரம் 1 மணி 15 நிமிடம்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. 'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க' என்பது பெரியபுராணத் திருவாக்கு.

அ) வேதங்காட்டும் வழிபாட்டு நெறிபற்றி விளக்குக.

ஆ) மிகுசைவத்துறை விளங்க உதவிய சிவாகமங்கள் காட்டும் வழிபாட்டு நெறியினை விளக்குக.

2. 'பொய்யின் நீக்கி என்னை மெய்யில் நடத்துக' என்பது பிருகதாரணியக உபநிடதத்தில் வரும் பிரார்த்தனையில் அமைந்த ஒரு சொற்றொடர்.

அ) உபநிடதங்கள் மெய்யில் நடத்துவதற்குக் காட்டும் தத்துவ நோக்கினை விரிக்குக.

ஆ) உபநிடதங்கள் கூறும் நல்வாழ்விற்கான அறிவுரைகள் எவை? விளக்குக.

3. 'கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' என்பது தொல்காப்பியம்.

அ) கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருவனவாகச் சொல்லிய முப்பொருள் பற்றியும் யாது அறிவீர்?

ஆ) சங்ககாலத்தில் தமிழ்மக்கள் வழிபட்ட முறைமைகள் பற்றி விளக்குக.

4. 'பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி' என்பது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைப் புகழ்ந்து கூறும் பாடல் அடி.

அ) புகலியர்கோனாகிய பாண்டிய மன்னனின் வெப்பு நோயை சம்பந்தர் போக்கிய வரலாற்றினைச் சுருக்கமாகத் தருக.

ஆ) அப்பரும் சுந்தரரும் சந்தித்த இரு சந்தர்ப்பங்களை விரித்து எழுதுக.

5. 'மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம் பெற்றனை' சிவபெருமான் சுந்தரரை நோக்கித் திருவாய் மலர்ந்தது இது.

அ) சிவபெருமானுடன் சுந்தரர் வாதாடி வழக்குரைத்த வரலாற்றினைத் தருக.

ஆ) சுந்தரரும் சேரமான் பெருமாளும் சந்தித்து நண்பராகி ஈற்றில் திருக்கயிலாயம் சென்ற வரலாற்றினை விபரிக்குக.

6. 'ஊழிமலி திருவாத வூரர்திருத்தாள் போற்றி' என்பது மணிவாசகப் பெருமானைப் புகழ்ந்துரைக்கும் பாடலடி.

அ) திருவாதவூரருக்காகச் சிவபெருமான் நரியைப் பரியாக்கியும் பரியை நரியாக்கியும் புரிந்தருளிய திருவிளையாடல்களை விரிக்குக.

ஆ) திருவாதவூரருக்கு "மாணிக்கவாசகர்" என்ற திருநாமம் அமைந்த பொருத்தப்பாட்டினையும், சிவபெருமானே அவர்தம் திருவாசகம், திருக்கோவையார் ஆகியவற்றை ஏட்டில் எழுதிய வரலாற்றினையும் சுருங்கத் தருக.

7. 'கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க' என்பது மணிவாசகரின் திருவாக்கு.

அ) குருவழிபாடு பற்றி விளக்குக.

ஆ) தீட்சை பற்றிய சைவசித்தாந்தக் கருத்துக்களைத் தருக.

8. 'விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விதிப்படி விசேடமாக வழிபடல்'

அ) சத்தியின் மகிமை பற்றிக் கூறி நவராத்திரி விரதம் பற்றித் தெளிவாக விளக்குக.

ஆ) விரதத்திற்கும் பண்டிகைக்கும் உள்ள வேறுபாடு யாது? தமிழரின் நன்றிக்கடனை வெளிப்படுத்தும் பண்டிகை பற்றி விளக்குக.

விற்பனையாகின்றன!

# எமது வெளியீடுகள்

1. 40 கட்டுரை மஞ்சரி ஆண்டு 10 — பண்டிதர் சு. வேலுப்பிள்ளை
2. அடிப்படை இலக்கணம் ஆண்டு 10 ,, ,,
3. இலக்கணத் தெளிவு G.C.E. (A/L) — க. சொக்கலிங்கம்
4. திருக்குறள் G.C.E. (A/L) ,,
5. விஞ்ஞான வினா விடை பகுதி– I ஆண்டு 10 - செ. வேலாயுதபிள்ளை
6. விஞ்ஞான வினா விடை பகுதி– II ஆண்டு 10 ,,
7. விளக்கும் விஞ்ஞானம் ஆண்டு 8 ,,
8. தாவரவியல் பகுதி I G. C. E. (A/L) ம. சிவபாலராசா M.Sc.
9. தாவரவியல் பகுதி II B ,, ,,
10. இந்து நாகரிகம் – பகுதி இரண்டு — க. சி. குலரத்தினம்
11. இந்து நாகரிகம் – பகுதி மூன்று ,,

பதிப்பாளர்:

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**

235, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.